# ஹஸ்ரத் அலீ இப்னு மூஸா
# இமாம் றிழா
# அலைஹிஸ்ஸலாம்

பிறப்பு

இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் ஹிஜ்ரி 148ல் பதினோராம் மாதம் பதினோராம் நாள் மதீனாவில், இமாம் மூஸா இப்னு ஜஃபர் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வீட்டில் பிறந்தார்கள். (1)

அவரது இயற் பெயர் அலீ. றிழா எனப் பிரசித்தமாகி இருந்தார். அன்னாரின் தாயாரின் பெயர் நஜ்மா. அவர் ஈமான், இறையச்சம், அறிவு போன்றவைகளில் மிக பிரசித்தி பெற்ற பெணமனியாக திகழ்ந்தார். (2)

பொதுவாக இமாம்கள் அனைவரும் சிறந்த தந்தையர்களின் வழித்தோன்றல்களில் உதித்து சிறப்புகள் பல கொண்ட தாயார்களின் மடிகளில் வைத்து பயிற்றுவிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இமாமத்

இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் ஹிஜ்ரி 183இல் தமது தந்தை இமாம் காழிம் அலைஹிஸ் ஸலாம்; ஹாரூனின் சிறையில் ஷஹீதாக்கப் பட்டதன் பின்பு தமது 35ஆவது வயதில் உம்மத்தை நேர்வழியில் செலுத்துகின்ற இமாமத் எனும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களது இமாமத்தும் ஏனைய மஃசூமீன்களின் இமாமத்தைப் போன்று நபிகளாரின் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி குறிப்பின்படியும் இமாம் காழிமின் அலைஹிஸ் ஸலாம் முன்னறிவிப்புடனும் இடம்பெற்றது.

இமாம் காழிம் அலைஹிஸ் ஸலாம் சிறைப்பட்டுச் செல்வதற்கு முன், தமக்குப் பிறகு உம்மத்தினர் வழிகேட்டில் விழ விடாமல் தடுத்து அவர்களை நேர்வழியின் பாலும் உண்மையின் பாலும் வழிநடாத்தும் இமாம் யாரென சொல்லியிருந்தார்கள்.

மஹ்ரஸூமீ கூறுகின்றார்:
இமாம் காழிம் அலைஹிஸ் ஸலாம் எம்மை அழைத்து, "எதற்காக அழைத்தேன் தெரியுமா?" என்று கேட்டார்கள்.

'தெரியாது" என்று நாம் கூறினோம்

இமாம் ரிழா அலைஹிஸ்ஸலாம் அவர்களை சுட்டிக் காட்டி "இந்த மகன் எனக்குப் பிறகு எனது பிரதிநிதியாகும். இதற்கு நீங்கள் சாட்சியாக இருந்துகொள்ளுங்கள்" என்றார்கள். (3)

யசீத் இப்னு சலீத் கூறுகின்றார்:

நான் உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்ற போது வழியில் ஓரிடத்தில் இமாம் காழிமைச் -அலைஹிஸ் ஸலாம்- சந்தித்தேன்.

அப்போது அவர்களிடம், "இவ்விடத்தை அறிவீர்களா?" என வினவினேன். அவர் "ஆம்" என்றுவிட்டு, "உமக்கும் இவ்விடத்தைத் தெரியுமா?"என்று கேட்டனர்.

"ஆம்" என்ற நான், "ஒரு நாள் நானும் என் தந்தையும் இவ்விடத்தில் தங்களையும் தங்கள் தந்தை இமாம் சாதிக் அலைஹிஸ் ஸலாம் அவர்களையும் சந்தித்தோம். அவ்வேளையில் தங்களது ஏனைய சகோதரர்களும் தங்களுடன் இருந்தனர். என் தந்தை இமாம் சாதிக்கிடம் "நீங்கள் அனைவரும் எமது வழிகாட்டிகளாவீர்கள். நாம் அனைவரும் மரணத்தை சுவைத்தே ஆகவேண்டும். ஆதலால் நான் மற்றவர்களை வழிகேட்டிலிருந்து நேர்வழிப்படுத்துவதற்காக எனக்கு சில விடயங்களைச் சொல்லுங்கள்" என்றார்கள்.

இமாம் சாதிக் அலைஹிஸ் ஸலாம் சொன்னார்கள்: "அபூஅம்மாரே! இவர்கள் எனது பிள்ளைகளாகும். ( இமாம் காழிமை நோக்கி) அவர்களில் பெரியவர் இவராகும். இவரில் நீதி வழங்கும் தகுதி, விளக்கம், மற்றவர்களுக்கு உதவும் பழக்கம் நிறைந்திருக்கின்றன. மனிதர்களுக்குத் தேவையானதை நன்கறிந்தவர். மேலும், மனிதர்கள் கருத்து வேற்றுமை கொண்டிருக்கும் ஆன்மீக, இலௌகீக விடயங்களில் பூரண அறிவு கொண்டவர். சிறந்த நன்னடத்தையுடையவர். அவர் இறைவனது நேசர் ஆவார்" என்றார்கள்.
அப்போது நான் இமாம் காழிம் -அலைஹிஸ் ஸலாம்-அவர்களிடம் 'தாங்களும் தங்கள் தந்தையார் போன்று தங்களுக்குப் பிறகுள்ள இமாமை எமக்கு அறிவியுங்கள்' என்றேன்.

'இமாமத் இறைவனது ஏவலாகும். இமாம் இறைவனதும் இறைத்தூதரதும் புறத்திலிருந்து தெரிவு செய்யப்படுகின்றார்' என்ற இமாமத்தைப் பற்றிய சிறுவிளக்கத்தின் பின் இமாம் காழிம் சொன்னார்கள்: “எனக்குப் பிறகு இமாமத்தெனும் பொறுப்பு முதலாவதும் நான்காவதும் இமாம்களின் பெயரைக் (அலீ) கொண்ட எனது மகன் அலீயை வந்தடையும்” என்றார்கள்.

அக்காலத்தில் முஸ்லிம் சமுதாயத்தின் அரசர்களாக மோசமானவர்களே இருந்ததினால் இமாம் காழிம் தமது உரையின் இறுதியில் சொன்னார்கள்: “யசீதே! உனக்குச் சொல்லப்பட்டது, அனைத்தும் உன்னிடத்தில் அமானிதத்தைப் போன்று பாதுகாப்பாக இருக்கட்டும். அதை நீ எவர்களையெல்லாம் உண்மையான நம்பிக்கையாளர்கள் என்று அறிவீரோ அவர்களைத் தவிர வேறு எவருக்கும் சொல்ல வேண்டாம்” என்றார்கள்.

யசீத் இப்னு சலீத் சொல்கிறார்: இமாம் மூஸா இப்னு ஜஃபர் அலைஹிஸ் ஸலாம் ஷஹீதானபின் நான் இமாம் ரிழாவிடம் வந்தேன். அப்போது இமாம் என்னிடம், “யசீதே! உம்ராவிற்குச் செல்வோம் வருகின்றீரா?” என்று கேட்டார்கள்.

நானும் “தங்கள் விருப்பம் போல் ஆகட்டும்” என்று விட்டு, “மன்னிக்க வேண்டும். தற்போதைக்கு என்னிடம் பிரயாணச் செலவு இல்லை” என்றேன்.

அதற்கு இமாம், “நான் அதைத் தருகின்றேன்” என்றார்கள். பின் நானும் இமாம் ரிழாவும் மக்காவை நோக்கி சென்று கொண்டிருக்கும் போது வழியில் முன்பு இமாம் ஸாதிக் அலைஹிஸ் ஸலாம், இமாம் மூஸா இப்னு ஜஃபர் அலைஹிஸ் ஸலாம் இருவரையும் சந்தித்த இடத்தை அடைந்தோம்.

அப்போது நான் மூஸா இப்னு ஜஃபர் அலைஹிஸ் ஸலாம் சந்தித்ததையும் அவர்கள் கூறிய அனைத்து விடயங்களையும் இமாம் ரிழாவுக்குச் சொன்னேன்.

## நற்குணமும் நன்னடத்தையும்

எமது இமாம்கள் மக்களுக்கு மத்தியில் மக்களுடன் வாழ்ந்தார்கள். தம் செயல்களின் மூலமாக அவர்களுக்கு வாழ்க்கையெனும் பாடத்தைப் புகட்டினார்கள். அவர்கள் இமாமத் எனும் பதவியால் மக்களை விட உயர்ந்தவர்கள், பூமியில் இறைவனால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதனால் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். தம்மை மக்களை விட்டும் ஒதுக்கிக் கொள்ளவில்லை. அடக்குமுறை ஆட்சியாளர்களைப் போன்று

எதனையும் தமக்கென சொந்தமாக்கிக் கொள்ளவுமில்லை ஒருபோதும் அவர்கள் மக்களை அடிமைகளாக்கவோ, இழிவுபடுத்தவோ இல்லை.

இப்ராஹீம் இப்னு அப்பாஸ் சொல்கின்றார்:
“இமாம் ரிழா தன் பேச்சில் மற்றவர்களைப் புறக்கணித்ததாகவோ ஒருவருடைய பேச்சு முடிவடையும் முன் துண்டித்ததையோ நான் எங்கும் எப்போதும் காணவில்லை.
“மேலும் ஒருவருடைய தேவையை தம்மால் நிவர்த்தி செய்ய முடியுமாயின், ஒருபோதும் அதனை நிராகரிக்காது நிவர்த்தி செய்து வந்தார்கள். மற்றவர்களுக்கு மத்தியில் தம் கால்களை நீட்டி அமர மாட்டார்கள். ஒருபோதும் அவர்கள் தம் பணியாட்களுக்கு ஏசியதாகவோ, துன்பமடையும் வார்த்தைகளைக் கூறியதாகவோ இதுவரை எவரும் கூற நான் கேட்கவில்லை. அவர்களின் சிரிப்பு எப்போதும் புன்முறுவலாகவே இருந்தது.

“சாப்பிடும் நேரம் வந்ததும் காவலாளி, இடையன் உட்பட வீட்டார் அனைவரையும் அழைத்து அவர்களுடன் உணவு உண்ணுவார்கள். இரவு வேளைகளில் சிறிது நேரம் தூங்குவார்கள். அதிகமாக விழித்திருந்து இறைவணக்கத்தில் ஈடுபடுவார்கள். அதிகமாக நோன்பும் நோற்பார்கள். (4)

“நல்ல காரியங்களில் ஈடுபடல், மறைவாக உதவுதல் போன்றவை அவர்களிடம் நிறைந்து காணப்பட்டன. கூடுதலாக இருண்ட இரவு நேரங்களில் ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார்கள். (5)

முஹம்மத் இப்னு அபு உப்பாத் கூறுகிறார்:
இமாம் கோடை காலத்தில் தூங்குவதற்கு ஓலையினால் பின்னப்பட்ட பாயையும் மாரி காலத்தில் கம்பளியால் ஆன விரிப்பையும் உபயோகித்து வந்தார்கள். வீட்டில் அவர்களின் ஆடை மிகவும் சாதாரணமாக இருந்தது. பொதுவான சபைகளுக்குப் போகும் போது அதற்குகந்த பொருத்தமான ஆடையை அணிந்து தம்மை அழகுபடுத்திக் கொள்வார்கள். (6)

ஒரு நாள் இரவு இமாமின் வீட்டில் விருந்தாளி ஒருவர் தங்கினார். இமாமுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர்களுக்கு மத்தியில் இருந்த விளக்கு மங்கியது. அதை சரிப்படுத்த விருந்தாளி தன் கையை நீட்டிய போது, இமாம் அதனைத் தடுத்து தம் கையால் அதனை சரிபடுத்தி விட்டுச் சொன்னார்கள். “நாங்கள் எமது விருந்தாளிகளிடம் வேலை வாங்கும் கூட்டத்தினர் அல்ல.| (7)

ஒருமுறை இமாம் பொதுக் குறியலறைக்குச் சென்றிருந்தார். இமாமை அறிமுகமில்லாத ஒருவர், தன் உடம்பிலுள்ள அழுக்குகளைத் தேய்த்து நீக்கி விடுமாறு இமாமிடம் வேண்டினார். இமாமும் அவ்வாறே செய்தார்கள்.

அப்போது அங்கிருந்தவர்கள், அம்மனிதருக்கு இமாமைப் பற்றி அறிவிக்க, அவர் வெட்கித் தலைகுனிந்தவராக இமாமிடம் மன்னிப்புக் கோரினார், இமாமோ அதைக் கவனிக்காது தம் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். வேலை முடிந்ததும் ஒன்றும் நடக்காதது போல் அம்மனிதருக்கு ஆறுதல் கூறினார்கள். (8)

ஒரு மனிதர் இமாம் ரிழாவை நோக்கி, “இறைவன் மீது ஆணையாக இப்பூமியில் தங்களைப் போன்ற சிறந்த தந்தையில்லை. என்று கூறினார். இமாம் அவருக்கு தக்வாவை உபதேசித்து தம் அனைத்து விடயங்களிலும் இறைவனை முன்னிறுத்திக் கொள்ளுமாறு உபதேசம் செய்தார்கள். (9)

பல்ஹு நாட்டைச் சேர்ந்த ஒருவர் கூறுகின்றார்:
ஒருமுறை நான் குராசானை நோக்கி இமாமுடன் பிரயாணம் சென்றேன். ஒரு நாள் இமாம், தம்முடன் இருந்த கறுப்பர்கள் உட்பட அனைத்து பணியாளர்களையும் தம்முடன் இருந்து உணவு உண்ணுமாறு அழைத்தார்கள்.

அப்போது நான் இமாமை நோக்கி, “அவர்கள் வேறாக இருந்து உண்டால் நன்றாக இருக்குமே” என்று கூற, இமாம் என்னை அமைதியாக இருக்குமாறு கூறிவிட்டு, “எமது அனைவரது இறைவனும் ஒருவனே. அனைவரது தந்தையும் ஒருவரே. ஒவ்வொருவரது கூலியும் அவர்களது நற்கருமங்களுக்கு ஏற்றதாகும்” என்று கூறினார்கள். (10)

இமாமின் பணியாட்களில் ஒருவரான யாசிர் கூறுகின்றார்:
இமாம் ரிழா எங்களை நோக்கி, “நீங்கள் உணவருந்திக் கொண்டிருக்கும் போது நான் உங்களை அழைத்தால், நீங்கள் சாப்பிட்டு முடியும் வரை எழுந்து விடாதீர்கள்”என்றார்கள்.

பல தடவைகள் நாங்கள் உணவருந்திக் கொண்டிருக்கும் போது இமாம் எங்களை அழைப்பார்கள். 'சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்' என அவர்களுக்குக் கூறப்பட்டதும் 'முடித்து விட்டு வாருங்கள்' என்று கூறுவார்கள். (11)

ஒருமுறை ஒருவர் இமாமிடம் வந்து ஸலாம் கூறிவிட்டுச் சொன்னார்: "நான் தங்களையும் தங்கள் தந்தையர், மூதாதையர்களையும் நேசிக்கும் ஒருவன். இப்போது நான் ஹஜ் கடமையை நிறைவேற்றி விட்டு வருகின்றேன். ஆனால் எனது பணம் அனைத்தும் முடிந்து விட்டது. எனக்கு நீங்கள் உதவி செய்ய விரும்பினால், எனது ஊரைப் போய்ச் சேர்வதற்காக சிறு தொகைப் பணம் தாருங்கள்" என்றும், "நான் எனது ஊரில் ஏழையானவன் அல்ல. ஆனால், இப்போது தேவையானவனாக உள்ளேன். தாங்கள் எனக்குக் கொடுப்பதைப் போன்றதொரு பங்கை அங்கு நான் ஸதகா செய்வேன்"என்றும் கூறினார்.

இதைக் கேட்ட இமாம் எழுந்து வேறொரு அறைக்குச் சென்று இருநூறு தீனார்களை எடுத்து, கதவுக்கு மேலால் தம் கையை நீட்டிச் சொன்னார்கள். "இந்த இருநூறு தீனார்களையும் எடுத்து உங்கள் பிரயாணத்திற்கு வைத்துக் கொள்ளுங்கள். ஊரை அடைந்ததும் இது போன்றதொரு பங்கை என் தரப்பிலிருந்து சதகா செய்வது அவசியமில்லை" என்றார்கள்.

அம்மனிதரோ தீனார்களைப் பெற்றுச் சென்ற பின் இமாம் அவ்வறையிலிருந்து தமது இடத்திற்கு வந்தார்கள். அப்போது தோழர்கள் "இமாமே! அம்மனிதர் தங்களிடமிருந்து தீனார்களைப் பெறும் போது அவர் தங்களைக் காணக்கூடாது என்பதற்காகவா இவ்வாறு செய்தீர்கள்?" எனக் கேட்டனர்.

அதற்கு இமாம், "அம்மனிதர் தனக்குத் தேவையானதைக் கேட்டுப் பெறும் போது அவர் வெட்கப்படுவதை நான் பார்க்கக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்தேன்" என்றார்கள். (12)

இமாம்கள் தம் தோழர்களைப் பயிற்றுவிப்பதிலும் அவர்களுக்கு நேர்வழியைக் காண்பிப்பதிலும் ஈடுபாடு காண்பித்ததோடு, போதிப்பதோடு மாத்திரம் நின்று விடாமல், அவர்களது நடவடிக்கைகள் அனைத்தையும் கண்காணித்தும் வந்தார்கள். மக்களின் வாழ்வில் பிழையொன்று குறுக்கிடும் போது அதை பிழையெனக் கூறி அதிலிருந்து மீளுவதற்கான வழிமுறைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்.

இமாம் ரிழாவின் சீடர்களில் ஒருவரான சுலைமான் அல் ஜஃபரி கூறுகின்றார்: நான் சில தேவைகளுக்காக இமாமிடம் சென்றிருந்தேன் என் விடயம் முடிந்து வீடு செல்ல அனுமதி கேட்ட போது இமாம் என்னைத் தம் வீட்டில் தங்குமாறு பணித்தார்கள்.

பின்னர் இமாம் என்னை அழைத்ததன் பிரகாரம் அன்னாரோடு; வீட்டை நோக்கை நடந்து சென்றோம். அது மாலை நேரம். வழியில் இமாமுடைய பணியாட்கள் கட்டட வேலையொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கிடையில் ஒரு புதியவரும் காணப்பட்டார்.

அப்போது இமாம் "யார் அவர்?" என வினவ, "அவர் எமது கூலிக்காரர். வேலை முடிந்ததும் அவருக்கு ஏதாவது கொடுப்போம்" என்று அவர்கள் கூறினர்.
இமாம், "அவரது கூலியைப் பேசித் தீர்மானித்தீர்களா?" என வினவ, "இல்லை. எவ்வளவு கொடுத்தாலும் அவர் ஏற்றுக் கொள்வார்" என்றனர்.

இதைக் கேட்டதும் இமாம் ஆச்சரியமும் கோபமும் அடைந்தார்கள். "கோபப்பட வேண்டாம்" என்று நான் அவர்களுக்குக் கூறினேன். அதற்கவர்கள்:

"எந்தவொரு தொழிலாளியையும் அவரது கூலியை நிர்ணயிக்காது வேலைக்கு அமர்த்த வேண்டாம் என பல தடவைகள் நான் இவர்களுக்குக் கூறியுள்ளேன். எவ்வித முன் பேச்சுமின்றி ஒருவரை வேலைக்கு அழைத்து, இறுதியில், கொடுக்கும் கூலியை விட மூன்று மடங்கு அதிகமாகக் கொடுத்தாலும் கூலி குறைவாகக் கொடுத்ததாகவே அவர் நினைப்பார். மாறாக அவருடன் பேசி கூலியை நிர்ணயித்த பின் இறுதியில் அதைக் கொடுத்தால், உடன்படிக்கையின் பிரகாரம் செய்ததையிட்டு அவர் சந்தோஷப்படுவார். அத்தோடு, இறுதியில் குறிப்பிட்ட தொகையை விட அதிகமாகக் கொடுத்தால், பேசியதை விட அதிகமாகக் கொடுத்ததையிட்டு அவர் தனது நன்றியைத் தெரிவிப்பார்" என்று கூறினார்கள். (13)

இமாமின் மிக நெருங்கிய தோழர்களில் ஒருவரான அஹ்மத் இப்னு அபிநஸ்ர் பஸந்தி அறிவிக்கின்றார்:

நானும் வேறு மூன்று பேரும் இமாமிடம் சென்று சில மணிநேரம் அவர்களுடன் உரையாடினோம். பின் நாம் இருப்பிடங்களுக்குச் செல்ல எழுந்த போது, இமாம் என்னை நோக்கி 'அஹ்மதே! நீர் கொஞ்சம் இருப்பீராக' என்றார்கள்.

என்னுடன் இருந்தவர்கள் சென்றுவிட்டனர். நான் இமாமிடம் இருந்தேன். என்னிடம் இருந்த கேள்விகளுக்கெல்லாம் இமாமிடமிருந்து பதில்களைப் பெற்றுக் கொண்டேன்.

இரவின் ஒரு பகுதி கழிந்தது. விடைபெறுவதற்காக எழுந்த போது "போகின்றீரா? அல்லது இங்கு தங்குகின்றீரா?" எனக் கேட்டார்கள். நான், "அனைத்தும் தங்கள் சித்தம். போ என்றால் போகிறேன். இரு என்றால் இருக்கிறேன்" என்று கூறினேன்.

இமாம் என்னைத் தங்குமாறு பணித்து ஓர் இடத்தை சுட்டிக் காட்டி 'இங்கே தூங்கலாம்' எனக் கூறி விட்டு தமது அறைக்குச் சென்றார்கள்.

நான் மகிழ்ச்சியின் காரணத்தால் சுஜூதுக்குச் சென்று, "இந்த நபிகளாரின் பரம்பரையில் உதித்த அல்லாஹ்வின் அத்தாட்சிக்கு பணிவிடை செய்வதற்காக பலர் வந்தும் என்னை விரும்பித் தேர்ந்தெடுத்ததற்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன்" என்று பிரார்த்தித்தேன்,

சஜ்தாவிலிருந்து எழும்பு முன் இமாம் மீண்டும் வந்திருப்பதை உணர்ந்து திடீரென சுஜூதிலிருந்து எழுந்தேன். அப்போது , இமாம் என் கையைப் பிடித்து மெதுவாக அழுத்தி விட்டுச் சொன்னார்கள்:

"அஹ்மதே! அமீருல் முஃமினீன் அலீ தம் நெருங்கிய தோழர்களில் ஒருவரான சஃசஆ இப்னு சௌஹான் என்பவரை நோய் விசாரிக்கச் சென்றார். அவர் அமீருல் முஃமினீனைக் கண்டதும் எழுந்து நிற்க முயற்சி செய்தார்.

அப்போது அமீருல் முஃமினீன் சஃசஆவை நோக்கி, 'நான் உம்மை சந்திக்க வந்ததற்காக நீர் மற்றவர்களிடம் பெருமையடித்துக் கொள்ள வேண்டாம். அதாவது நான் உன்னைப் பார்க்க வந்தேன் என்பதற்காக மற்றவர்களை விட நீர் உயர்ந்தவர் ஆக முடியாது. எனவே, இறைவனைப் பயந்து கொள். அவனுக்கு அடிபணிந்து வாழ்ந்தால், அவன் உமக்கு உயர்ந்த அந்தஸ்து பதவிகளைத் தருவான்' என்று கூறினார்கள். (14)

எந்தவொரு காரணியும் சிறந்த நற்கருமங்களின் இடத்தை அடையமாட்டாது என்பதை தமது சொல் செயலின் மூலமாக இமாம் அலீ அம்மனிதருக்குப் போதித்தார். அத்தோடு நாம் எந்தச் செயலுக்காகவும் ஒருபோதும் பெருமையடிக்கக் கூடாது. அது நாம் இமாமின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றிருந்தாலும் சரியே. ஒருபோதும் நாம் அதன் மூலம் மற்றவர்களை விட சிறந்தவர்களாகவும் கருத முடியாது.

ஆட்சியாளர்களுடன்

இமாம் அலீ இப்னு மூஸா ரிழா அலைஹிஸ் ஸலாம் இமாமாக இருந்த காலகட்டம் ஹாரூன் அல் ரஷீத், அவரது இரண்டு பிள்ளைகளான அமீன், மஃமூன் ஆகியோரின் ஆட்சிகாலமாக இருந்தது. அதாவது ஹாரூன் ரஷீதின் கடைசிப் பகுதியின் பத்தாண்டுகள் அமீனுடைய ஆட்சிக் காலத்தில் ஐந்தாண்டுகள், மஃமூனது ஆட்சிக் காலத்தில் ஐந்தாண்டுகள்.

ஹாரூனுடன்

இமாம் ரிழா அலைஹிஸ் ஸலாம் தம் தந்தை இமாம் காழிமின் ஷஹாதத்திற்குப் பிறகு தமது இமாமத் பொறுப்பை எவ்வித அச்சமும் கலக்கமும் இன்றி ஏற்றுக் கொண்டதன் பிறகு, பகிரங்கமாக சமூகத்தை வழிநடாத்தத் தொடங்கினார்கள். ஹாரூன் ரஷீதின் காலத்தின் அரசியல் சூழ்நிலைகள் மக்களுக்கு பயத்தை ஏற்படுத்துவதாக இருந்ததால், இமாமின் நெருங்கிய தோழர்கள் இமாமின் இந்த கலக்கமற்ற, அச்சமற்ற பணிகளால் அவர்களின் உயிருக்கு ஆபத்து விழையக்கூடுமெனப் பயந்தார்கள்.

சப்வான் இப்னு யஹ்யா கூறுகின்றார்:

இமாம் ரிழா தமது தந்தையின் ஷஹாதத்திற்குப் பிறகு சில வார்த்தைகள் சொன்னார்கள். நாம் அவர்களது உயிருக்கு ஏதாவது நிகழ்ந்து விடுமெனப் பயந்து விட்டோம். இதனால், நாம் அவர்களுக்குக் கூறினோம்: “மிகப் பெரிய விடயங்களை பகிரங்கமாக கூறுகிறீர்கள். ஆனால், நாம் இந்த அநியாயக்காரனால் தங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமென அஞ்சுகின்றோம்”

அதற்கு இமாம் “அவன் விரும்பியது போன்று தனது திட்டங்களைத் தீட்டிக் கொள்ளட்டும். இதனால் எனக்கு ஒன்றும் ஏற்படப் போவதில்லை” (15)என்று கூறினார்கள்.

முஹம்மத் இப்னு சினான் சொல்கின்றார்:

ஹாரூனுடைய ஆட்சிக் காலத்தில் நாம் இமாமிடம் கூறினோம். “தாங்கள் தங்களது தந்தையின் இடத்தில் அமர்ந்துள்ளீர்கள். ஹாரூனுடைய வாளில் இன்னும் குருதி துளித் துளியாக வடிந்து கொண்டிருக்கிறது.' அதற்கு இமாம் சொன்னார்கள்:

“நான் இவ்வாறு தயங்காது, கலங்காது, பயப்படாது இருப்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களின் பொன்மொழிதான் காரணம். அவர்கள் ஒரு முறை கூறினார்கள்.:

“அபூஜஹ்ல் என் தலையிலிருந்து ஒரு முடியைக் கூட குறைக்க முடியாது. அவ்வாறு குறைத்து விட்டால், நான் நபியில்லை என்பதற்கு நீங்கள் சாட்சியாளர்களாக இருந்து கொள்ளுங்கள்.'

நான் சொல்கின்றேன் “ஹாரூன் என் தலையிலிருந்து ஒரு முடியைக் கூட களைந்து விட்டாலும் நான் இமாமில்லை என்பதற்கு நீங்கள் சாட்சியாளர்களாக இருந்து கொள்ளுங்கள்” (16)

இமாம் கூறியது போன்று இமாமுக்கு அநீதி விளைவிப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பமும் ஹாரூனுக்குக் கிடைக்கவில்லை.; ஈரானின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக தனது படைகளோடு குராசானுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலை ஹாரூனுக்கு ஏற்பட்டது. இவ்வாறு சென்றவர் இடையில் சுகவீனமடைந்து ஹிஜ்ரி 193ல் தூஸ் நகரில் மரணித்தார்.

அமீனுடைய காலம்

ஹாரூனுடைய மரணத்திற்குப் பிறகு ஆட்சி விடயத்தில் அமீனுக்கும் மஃமூனுக்கும் இடையில் கடும் கருத்து வேறுபாடுகளோடு தகராறுகளும் ஏற்பட்டன. ஹாரூன், அமீனை தனக்குப் பிறகு வரும் கலீபாவென நியமனம் செய்திருந்தார். இன்னும் அமீனுக்குப் பிறகு மஃமூன் கலீபாவாக வேண்டுமெனவும் அவனிடம் உறுதிமொழி பெற்றிருந்தார்.

அத்துடன் அமீனுடைய ஆட்சிக் காலத்தில் கொராசான் மாநிலம் மஃமூனுடைய பொறுப்பில் இருக்க வேண்டுமெனவும் கூறியிருந்தார். ஆனால், அமீன் ஹாரூனின் மரணத்திற்குப் பிறகு ஹிஜ்ரி 194இல் மஃமூனை இளவரசர் பதவியிலிருந்து நீக்கி விட்டு தனது மகன் மூஸாவை இளவரசனாக்கினார். (17)

இறுதியில் அமீனுக்கும் மஃமூனுக்குமிடையில் இரத்தக் கலவரங்கள் உருப்பெற்றன. இதன் விளைவாக, ஹிஜ்ரி 198இல் அமீன் கொலை செய்யப்பட்டு மஃமூன் ஆட்சி பீடம் ஏறினார்.

இமாம் ரிழா, ஆட்சியில் கலவரங்கள் ஏற்பட்ட காலத்தை மிகவும் பயன்படுத்தி தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு மார்க்க அறிவுகளைப் போதித்து அவர்களை நன்கு பயிற்றுவித்தார்கள்.

மஃமூனுடைய காலத்தில்

மஃமூன் அப்பாசிய கலீபாக்களுள் மிகவும் அறிவாளியாகவும் தந்திரசாலியாகவும் காணப்பட்டார். மார்க்க சட்டக் கலையிலும் வேறுபல கலைகளிலும் அவர் தேர்ச்சி பெற்றிரந்தார். இதனால், சில அறிஞர்களிடம் தர்க்கம் புரியவும் முனைந்தார்.

சமகாலத்திற்கேற்ற அறிவு அவரிடம் காணப்பட்டதால், அது அவரது மனிதத் தன்மையற்ற தந்திரங்களை முன்னெடுத்துச் செல்ல அவருக்கு உதவியாக அமைந்தது. அவ்வாறன்றி; ஒருபோதும் இஸ்லாத்தை நேசித்து இஸ்லாமியனாக இருந்தவர் அன்று. எது எவ்வாறு இருந்த போதிலும் தந்திரம், அநியாயம், அட்டூழியம், இழிவான செயல்களில் ஈடுபடல் போன்றவற்றில் மற்ற கலீபாக்களை விட வித்தியாசப் படவில்லை.

இருந்தும் மஃமூன் மற்ற கலீபாக்களை விட மக்களிடம் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டார். தன் முகஸ்துதியால் அதிகமாக பாமர மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தார். தனது ஆட்சிக்குத் தேவையான தீர்ப்புகளைப் பெறுவதற்காக மார்க்க அறிஞர்களுடன் அமர்ந்து ஆலோசிப்பதும் கலந்துரையாடுவதும் அவரது வழக்கமாக இருந்தது.

மஃமூன் கூடுதலாக காழி யஹ்யா இப்னு அக்ஸம் எனும் தீங்கு மனப்பாங்கு கொண்டிருந்த மனிதருடன் சேர்ந்திருந்தார். இது மஃமூனின் மார்க்கப் பற்றற்ற தன்மைக்கும் மோசமான செயல்களில் ஈடுபட்டதற்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஏனெனில், யஹ்யா இப்னு அக்தம் மக்கள் மத்தியில் மிக மோசமான ஒரு மனிதரென பிரபல்யம் பெற்றிருந்தார். அவரது தீங்குகளை எழுதுவதற்கு பேனை கூட வெட்கப்படுகிறது. இருந்தும் மஃமூன் இத'தகைய ஒருவருடன் சேர்ந்திருந்ததால் அவர்கள் பள்ளி, குளியலறை, தோட்டத்துத் தோழர்கள் என கணிக்கப்படுகின்றனர். மேலும், அவரை இஸ்லாமிய சமூகத்தின் உயர் நீதியரசர் எனும் பதவியிலும் அமர்த்தி அவருடன் அரசியல் விவகாரங்களில் ஆலோசனைகளையும் பெற்றார். (18)

மஃமூனுடைய காலத்தில் கல்வி மேலோட்டமாக விருத்தியடைந்தது. அறிஞர்கள் ஆட்சிக் கூடத்திற்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார்கள். அது பிற்காலத்தில் அறிஞர்களையும் ஆய்வாளர்களையும் தன் பக்கம் ஈர்த்தெடுப்பதற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்தது. பாடங்களும் தர்க்க

முறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டதோடு அதைப் பற்றிய சம்பாஷணைகள் அனைத்து இடங்களிலும் இடம்பெற்றது கண்கொள்ளாக் காட்சியாகத் தோன்றியது.

அத்தோடு மஃமூன் ஷீயாக்களினதும் இமாமின் ஆதரவாளர்களினதும் ஆதரவைத் திரட்டுதவதற்காக பல வழிகளில் முயற்சி செய்தார். உதாரணமாக, அமீருல் முஃமினீன் அலீ அலைஹிஸ் ஸலாம் தான் நபியவர்களின் - ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி- பிரதிநிதியாக இருப்பதற்கு மிகத் தகுதியானவர்கள் என்று பேசத் தொடங்கினார்.

முஆவியாவை சபிப்பதையும் எதிர்ப்பதையும் உத்தியோகபூர்வமான கடமையாக்கினார். ஹஸ்ரத் பாத்திமா ஸலாமுல்லாஹி அலைஹா விடம் இருந்து அபகரிக்கப்பட்ட 'பதக்" எனும் தோட்டத்தை அவர்களது குடும்பத்தினர்களுக்கு மீட்டுக் கொடுத்து, தனது அன்பையும் ஆதரவையும் இமாம் அலீயின் குடும்பத்தினருக்கு வெளிப்படுத்திக் காட்டினார். (19)
பொதுவாக மஃமூன், ஹாரூனுடைய நடவடிக்கைகளையும் அவரது அட்டூழியங்களையும் கவனித்து, மக்கள் மத்தியில் கலவரங்கள் ஏதும் எழுந்து விடாமல், அவர்களது கலவர எண்ணங்களை அவர்களிடமிருந்து களைந்தெறிய முயற்சி செய்தார். எப்போதும் கிலாபத்தெனும் வாகனத்தில் தானே பிரயாணம் செய்ய வேண்டுமென்பதற்காகவே இந்த ஏற்பாடு. நாட்டிலிருக்கும் குறைகளை நிவர்த்தி செய்து மற்ற அரசர்களில் நான் வித்தியாசமானவன் என தன்னைக் காண்பிப்பதற்காக சில அபிவிருத்தி மற்றும் சீர்திருத்த விவகாரங்களையும் மற்றவர்களின் பொறுப்பில் விட்டார்.

அரசின் வாரிசாக

மஃமூன் தன் சகோதரர் அமீனை அழித்தொழித்து விட்டு சிம்மாசனத்தில் அமர, அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதாவது அப்பாசிய ஆட்சியின் தலைநகரான பக்தாதில் இருந்த அப்பாசிய ஆதரவாளர்கள் அமீனையே விரும்பினார். அவர்கள் மஃமூனது ஆட்சியை உகந்ததாகக் கருதவில்லை. இதனால் தொடர்ச்சியாக கடும் பிரச்சினைகள் எழுந்தன.

வேறொரு புறம் அலவியாக்களின் எழுச்சி மஃமூனுடைய அரசுக்கு மிகப் பெரும் பயத்தைக் கொடுத்தது. ஏனெனில், ஹிஜ்ரி 199இல் அலவீன்களில் ஒருவரான முஹம்மத் இப்னு இப்ராஹீம் தபாதபா என்பவர் அபுஸ்ஸராயா என்பவருடன் இணைந்து கிளர்ச்சி செய்தார். அலவீன்களில் வேறொரு குழுவினர் ஈராக்கிலும் ஹிஜாசிலும் பல எழுச்சிகளை மேற்கொண்டனர்.

அப்பாசியர்களின் பலவீனத்தினாலும் அமீனுக்கும் மஃமூனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுகளாலும் அனைத்து விடயங்களும் அங்குமிங்கும் குழம்பிக் கிடந்தன. அவற்றை இவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அத்தோடு சில முக்கிய நகரங்களையும் தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். கூபா தொடக்கம் யெமன் வரையும் கலவரங்களும் கிளர்ச்சிகளும் காணப்பட்டன. மஃமூன் தனது விடாமுயற்சியினால் இக் கிளர்ச்சிகளை முறியடித்தார். (20)

மேலும் ஈரானியர்கள் கூட அலவியருக்கு சார்பாக கிளர்ச்சி செய்வதும் சாத்தியமாக இருந்தது. ஏனெனில், ஈரானியர்கள் அமீருல் முஃமினீன் அலீ - அலைஹிஸ் ஸலாம்- குடும்பத்தினர்களின் உரிமை பற்றி; நம்பிக்கை கொண்டிருந்தனர். அப்பாசியர்களின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் கூட உமையா அரசைக் கவிழ்ப்பதற்காக, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர்கள் மீதும் மக்கள் கொண்டிருந்த பற்றை நன்றாகவே பயன்படுத்தினார்கள்.

மஃமூன் புத்திசாலியாகவும் தந்திரசாலியாகவும் இருந்தமையால் இவை பற்றி நன்கு சிந்தித்தார். அதாவது அரசுப் பொறுப்பையோ அல்லது வாரிசு உரிமையையோ இமாம் ரிழா போன்ற ஒருவருக்குக் கொடுத்து தனது அரசை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென திட்டமிட்டார். அத்துடன் இதன் மூலமாக அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபடும் அலவியர்களை சமாளிக்கவும் அவர்களது விருப்பங்களை ஒன்று திரட்டி ஈரானியர்களைக் கூட தனது அரசை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ய முடியுமெனவும் நம்பினார்.

இங்கு ஆட்சியையோ அல்லது வாரிசாக இருப்பதையோ இமாமுக்கு விட்டுக் கொடுப்பது வெறும் அரசியல் தந்திரமாகவே இருந்தது என்பது தெட்டத் தெளிவாகின்றது. அவ்வாறில்லையெனில் ஆட்சிப் பொறுப்புக்காக தனது சகோதரனைக் கொலை செய்த ஒருவர் தனது தனிப்பட்ட வாழ்வில் எவ்விதமான பாவங்கள், மோசமான செயல்களிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்ளாத ஒருவர் திடீரென தன்னை ஆட்சியிலிருந்து நீக்கிக் கொள்வாரா?

இமாம் ரிழா அலைஹிஸ் ஸலாம் மஃமூனின் இந்த முன் மொழிவுகளை ஏற்றுக் கொள்ளாதது மஃமூனின் தந்திரத்திற்கும் சதிமுயற்சிக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஏனெனில், மஃமூன் தனது சொல் செயலில் உண்மையாளனாக இருந்திருந்தால் ஒருபோதும் இமாம் தன்னைத் தவிற

வேறு ஒருவரும் தகுதி இல்லாத போது; அரசுப் பொறுப்பை எடுப்பதில் பராமுகமாக பொடுபோக்காக இருந்திருக்க மாட்டார்கள்.

வரலாற்று ஏடுகளில் வேறு பல ஆதாரங்களும் மஃமூனுடைய கெட்ட எண்ணத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அவையனைத்தையும் கூறுவது இயலாததால், விளக்கத்திற்காக ஒரு சிலவற்றை கீழே தருகின்றோம்.

மஃமூன் இமாமை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, அவரது செயற்பாடுகள் பற்றி தகவல்களைத் தருவதற்காக சில உளவாளிகளை நியமித்திருந்தான். இது இமாமின் மீதுள்ள மஃமூனின் விரோதத்தையும் குரோதத்தையும் நல்லெண்ணமின்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

இமாமிடத்தில் மிக நெருங்கியவர்களில் ஒருவராக இருந்த ஹுஸாம் இப்னு இப்ராஹீம் அல் ராஷீ என்பவர் இமாம் “மர்விற்கு” அழைத்துவரப்படுவதற்கு முன்னர் இமாமின் சகல விடயங்களையும் செய்பவராக இருந்தார். ஆனால், இமாம் மர்வுக்கு அழைத்து வரப்பட்டதன் பின் மஃமூனுடைய அமைச்சராக இருந்த பழ்ல் இப்னு ஸஹ்லின் தொடர்பு கிடைத்ததும் மாறிவிட்டார். அனைத்து விடயங்களையும் எதையும் மறைக்காது அரசவைக்கு அறிவித்தார். இதனால், மஃமூன் அவரை இமாமின் மெய்ப்பாதுகாவலனாக ஆக்கினார்.

ஹுஸாம் தனக்கு விருப்பமானவர்களை மாத்திரம் இமாமிடம் செல்ல அனுமதித்து இமாமைக் கடும் கஷ்டத்திற்குள்ளாக்கினார். இமாமுக்கு பாதுகாப்பு வேண்டுமெனக் கூறி மிக நெருக்கமான இடத்தில் இமாமை இருக்க வைத்தார். இதனால் இமாமின் நண்பர்களாலும் நேசர்களாலும் அவர்களை சந்திக்க முடியாது போனது. மேலும் இமாம் தம் வீட்டில் எதைப் பற்றிப் பேசினாலும் அதை ஹுஸாம் உடனடியாக மஃமூனுக்கு தகவலறிவித்தார். (21)

அபூ ஸல்த் என்பவர் இமாமின் மீதிருந்த மஃமூனது விரோதத்தையும் குரோதத்தையும் இவ்வாறு கூறுகின்றார்:

“இமாம் ரிழா அலைஹிஸ் ஸலாம் பல அறிஞர்களுடன் தர்க்கம் புரிந்து அவர்களை வென்ற போது, இறைவன் மீது சத்தியமாக இவர் மஃமூனை விட ஆட்சி புரிவதற்கு தகுதியானவரே. என மக்கள் அனைவரும் சொன்னார்கள. நிலைமைகளைக் கவனித்து செய்தியனுப்புவதற்காக நியமிக்கப்பட்டிருந்த உளவாளிகள் இதனை உடனடியாக மஃமூனுக்கு அறிவித்தனர். (22)

ஜஃபர் இப்னு முஹம்மத் இப்னு அல்அஷ்அஸ், இமாம் குராசானில் இருந்த போது கடிதங்கள் அனுப்பி வந்தார். தன் கடிதங்களைப் படித்ததன் பிறகு மற்றவர்களின் கைகளுக்குச் செல்லாதிருப்பதற்காக அவற்றை எரித்து விடுமாறு அவர் இமாமைக் கோரினார். இமாமும் அம்மனிதர் தனக்கேற்படும் ஆபத்திலிருந்து அச்சமற்றிருப்பதற்காக அவரின் கடிதங்களைப் படித்ததன் பின் எரித்து வந்தார். (23)

இமாம் ரிழா, மஃமூனின் முடிக்குரிய வாரிசாக அறிவிக்கப் பட்டிருந்த போது அஹ்மத் இப்னு முஹம்மத் பஸன்தி என்பவரின் பதில் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்கள். "நீர் என்னை சந்திப்பதற்காக அனுமதி வேண்டியிருந்தீர். ஆனால், என்னிடம் வருவது மிகவும் கஷ்டமாகும். ஏனெனில், இவர்கள் எனக்கு மிகவும் கஷடத்தைத் தருகின்றார்கள். எனவே, தற்போது உன்னால் என்னை சந்திக்க முடியாது. இனஷாஅல்லாஹ் மிக விரைவில் என்னை சந்திப்பது மிக மிக இலகுவாகிவிடும.;" (24)

சுயநலமிக்க மஃமூன், இமாமைப் பற்றி அவர் கொண்டிருந்த கெட்ட எண்ணத்தை தன் குடும்பத்தார்களிடத்திலும் தனக்கு நெருங்கியவர்களிடத்திலும் பல சந்தர்ப்பங்களில் மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

மஃமூன் தனது மந்திரி சபையில் ஒருவரான அஹ்மத் இப்னு மெஹ்ரான் என்பவருக்கும், முடிக்குரிய வாரிசாக இமாமை நியமித்ததை ஆட்சேபித்த அப்பாசியர்களின் ஒரு கூட்டத்தினருக்கும் பதில் கொடுக்கும் வகையில் கூறினார்:

"இந்த மனிதர் நம்மை விட்டுத் தூரமாக இருந்து மக்களை அவரின் பக்கம் அழைத்துக் கொண்டிருந்தார். ஆனால், அவரின் அழைப்புப் பிரசாரம் எமக்கு சார்பாக இருக்க வேண்டும், எமது ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும், எதற்காக அவர் வாதிட்டுக் கொண்டிருக்கின்றாரோ அது அவருக்கில்லை, ஆட்சி எமக்குரியது தான் என்பதை அவரின் சிஷ்யர்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்பதற்காகவே அவருக்கு நான் இநதப் பதவியை வழங்கியுள்ளேன்.; விரும்பியதைச் செய்யுமாறு நாம் அவரை விட்டுவிடுவோமானால், எமக்கு எதிராக கிளர்ச்சிகள் தோன்றலாம். சிலவேளை அதைத் தடுக்கப் போதிய வசதிகள் எம்மிடம் இல்லாது விடலாம். அல்லது ஒரு நிலைமை தோன்றலாம். அதை எதிர்கொள்ள சக்தியற்று விடுவோம் என அச்சம் கொண்டிருந்தேன்." (25)

எனவே, மஃமூன் இமாமுக்கு அரசு பதவியையோ, முடிக்குரிய உரிமையையோ கொடுப்பதில் நல்லெண்ணம் கொண்டிருக்கவில்லை, மாறாக, இந்த அரசியல்

விளையாட்டில் அவர் வேறு நோக்கங்களையே கொண்டிருந்தார். ஒரு புறம் இமாமை தனது நிலைப்பாட்டுக்குக் கொண்டு வந்து அவர்களின் இறையச்சத்தையும் பரிசுத்தத் தன்மையையும் அந்தஸ்தையும் மாசுபடுத்த விரும்பினார். மறுபுறம் தான் முன்வைத்த இரண்டு வேண்டுதல்களில் (கிலாபத் அல்லது விலாயத்) ஒன்றை மஃமூன் விரும்பியவாறு இமாம் ஏற்றுக் கொண்டிருந்தால், அது மஃமூனுக்குச் சார்பாக முடிந்திருக்கும்.

அதாவது இமாம் கிலாபத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் நிச்சயமாக மஃமூன் தானே முடிக்குரிய வாரிசாக இருப்பார். அதனால் தனது அரசை பலப்படுத்திக் கொண்ட பின், மறைமுகமான தனது சதித்திட்டத்தினால் இமாமை ஒதுக்கியிருப்பார். இமாம் முடிக்குரிய உரிமையை ஏற்றுக் கொண்டால் மீண்டும் மஃமூனுடைய ஆட்சி நிலைத்து நிற்பதற்கு கையொப்பம் இட்டுக் கொடுத்ததாய்ப் போய்விடும்.

ஆனால், இமாம் உண்மையில் மூன்றாவது வழியைத் தெரிவு செய்தார்கள். பலாத்காரத்தினால் முடியுரிமையை ஏற்றுக் கொண்டாலும் தனிப்பட்ட முறையில் மஃமூனுடைய இலக்கில் அகப்படாது இருப்பதற்காகவும் மஃமூனுடைய அரசு அநியாயக்கார அரசு என்பது மக்களுக்கு தெளிவாக வேண்டும் என்பதற்காகவும் இமாம் ஒரு தனிப்பட்ட முறையைக் கையாண்டு அதன்படி தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டார்கள்.

மதீனாவிலிருந்து மர்வ் நோக்கி

மேலே கூறியது போன்று மஃமூன் தன் அரசியல் இலாபத்திற்காகவும் பெரும் அறிஞர்களையும் வீரர்களையும் இறைநேசர்களையும் கொண்டிருந்த அலவியர்களை தனது ஆட்சியை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகவும் சமூகத்தை குறிப்பாக இமாமை நேசிக்கின்றவர்களை தன் பக்கம் கவரச் செய்வதற்காகவும் இமாமை மதீனாவிலிருந்து மர்வுக்கு அழைத்து வர முடிவு செய்தார்.

மஃமூன் வெளியில் மிகவும் நல்லவராகவும், நுணுக்கமாகவும் நடித்ததால் சில சமயங்களில் இமாமுக்கு நெருக்கமான ஒரு சில நேசர்களும் ஏமாந்தனர். இதனால், இமாம் தமது தோழர்களில் ஏமாறக் கூடியவர்கள் எனக் கணித்தவர்களை நோக்கி, "மஃமூன் சொல்வதைக் கேட்டு பெருமையடிக்காதீர்கள். ஏமாறாதீர்கள். இறைவன் மீது ஆணையாக நான் மஃமூனால் தான் கொலை செய்யப்படுவேன். இருந்தும் நான் அதிலிருந்து ஓடி

ஒழித்து விட மாட்டேன். அந்த நாள் வரும் வரை பொறுமையாக இருப்போம்” என்று கூறினார்கள். (26)

மஃமூன் தனது முடிக்குரிய வாரிசாக இமாமைப் பிரகடனப்படுத்தி ஹிஜ்ரி இருநூறாம் ஆண்டு மதீனாவிலிருந்து மர்வுக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். (27)

மஃமூனுடைய விசேட தூதுவர் ரஜா இப்னு அபிழஹ்ஹாக் கூறுகின்றார்:

“மஃமூன் என்னை மதீனா சென்று இமாம் ரிழாவை அழைத்து வருமாறு பணித்து, இரவும் பகலும் அவரைக் கண்காணிக்குமாறும் அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை வேறொருவரிடம் ஒப்படைக்க வேண்டாமெனவும் கட்டளையிட்டார். கும் வழியாக வராமல், பஸ்ரா, அஹ்வாஸ், பார்ஸ், வழியாக மர்வை வந்தடைய கட்டளையிட்டிருந்தார். நானும் அவரது கட்டளைக்குப் பணிந்து மதீனாவிலிருந்து மர்வ் வரை இரவும் பகலும் இமாமுடன் இருந்தேன். இறைவன் மீது ஆணையாக அந்த மாமனிதரைப் போன்று இறைவனுக்கு வழிபட்டு அவனைப் பயப்படக் கூடியவராக எந்தவொரு மனிதரையும் நான் காணவில்லை. இமாம் எப்போதும் அல்லாஹ்வை திக்ரு செய்து கொண்டேயிருந்தார்கள். (28)

‘நாம் மதீனாவிலிருந்து மர்வு வரைக்குமுள்ள கிராமங்களுக்குள் நுழைந்த போது அங்குள்ள மனிதர்கள் அனைவரும் இமாமுக்கு பணிவிடை செய்வதற்காக முண்டியடித்துக் கொண்டு வந்தனர். அத்தோடு, மார்க்க விடயங்களில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் மார்க்கத் தீர்ப்பும் கேட்டனர். இமாமும் அவர்களுக்குப் போதுமான விளக்கத்தை கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள். அத்தோடு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களிடமிருந்து தமது பாட்டனார்கள் மற்றும் தந்தை மூலமாக அறிவிக்கப்பட்ட அதிகமான ஹதீஸ்களை அம்மக்களுக்கு சொல்லிக் கொடுத்தார்கள் (29)

அபூஹாஷிம் ஜஃபரி என்பவர் கூறுகின்றார்:
ரஜாஃ இப்னு அபி ழஹ்ஹாக், இமாமை அஹ்வாஸ் வழியாக அழைத்து வந்தார். இமாம் அஹ்வாசிற்கு வரும் செய்தி எனக்குக் கிடைத்த போது நான் இமாமை முதன்முதலாய் சந்திக்கச் செனறேன், என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினேன். அது கோடை காலமாக இருந்ததால் கடும் உஷ்ணமாக இருந்தது. இதனால் இமாம் கூட சுகவீனமடைந்திருந்தார்கள்.

பின் இமாம் என்னை நோக்கி வைத்தியரை அழைத்து வருமாறு பணித்தார்கள். நான் வைத்தியரை அழைத்து வந்தேன். இமாம் வைத்தியருக்கு ஒரு தாவரத்தைப் பற்றிக் கூறினார்கள். அதைக் கேட்ட வைத்தியர் ‘உம்மைத் தவிர வேறு எவரும் இத்தாவரத்தைப் பற்றிக் கூற நான் கேட்டதில்லை’ என்று கூறிவிட்டு, ‘இத்தாவரம் இந்தக் காலத்தில் இந்த இடத்தில் இல்லை’ என்று கூறினார்.

அதற்கு இமாமவர்கள், “அப்படியானால், கரும்பு எடுத்து வாருங்கள்” என்று கூறினார்கள். வைத்தியரோ, “கரும்பு எடுப்பது, முன்பு கூறிய தாவரத்தை எடுப்பதை விட கடினமானது. ஏனெனில் இப்பருவம் கரும்பு செய்யும் பருவமல்ல” என்று கூறினார்.

அதற்கு இமாம், “இவையிரண்டும் இக்காலத்தில் உங்களது இந்த இடத்தில் உள்ளது” எனக் கூறிவிட்டு, அபூஹாஷிமை அழைத்து, வைத்தியரை குளக்கட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு பணித்தார்கள். “குளக்கட்டுக்கு அப்பால் ஓர் ஈத்தமரத் தோட்டம் இருக்கும். அங்கே சென்றால் ஒரு கறுத்த மனிதரைக் காண்பீர்கள். அவரிடம் கரும்பு இருக்கும் இடத்தையும், குறித்த தாவரம் இருக்கும் இடத்தையும் கேளுங்கள்” என்றும் கூறினார்கள்.

நாம் இமாம் கூறிய அடையாளங்களைக் கொண்டு குறித்த இடத்திற்குச் சென்று அவ்விரு தாவரங்களையும் கொண்டு வந்தோம். அபபோது இமாம் அல்லாஹ்வுக்கு நன்றி கூறினார்கள்.

பின் வைத்தியர் என்னிடம் இம்மனிதர் யாரெனக் கேட்டார். நான் 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களின் பிள்ளை' என்றேன். வைத்தியர், “நபிமார்களிடமிருந்த அறிவுகளில் ஏதும் இவரிடம் உண்டா?” என வினவினார். அதற்கு நான், “ஆம். இப்போது சில விடயங்களை நாம் கண்டுகொண்டோமே. ஆனால், அவர் நபியல்ல” என்றேன்.

வைத்தியர், “அவர் நபியுடைய பிரதிநிதியா?” என்று கேட்டார். “ஆம். நபியுடைய பிரதிநிதிகளில் ஒருவர்” என்று நான் கூறினேன். இச்செய்தி எப்படியோ ரஜாவுடைய காதுக்கு எட்டிய போது, அவர் தன் தோழர்களை நோக்கி, “இதன் பின்னும் இமாம் இங்கு இருப்பாரேயானால், மக்கள் அனைவரும் அவரிடம் வந்து விடுவார்கள். உடனடியாக இமாமை இங்கிருந்து கொண்டு சென்றுவிட வேண்டும்” எனக் கூறி அங்கிருந்து வேறொரு இடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றனர். (30)

நைஷாபூரில்

இமாம் நைஷாபூரில் ஒருவரின் வீட்டுக்குச் சென்றார்கள். அவ்வீட்டிலிருந்த பெண்ணொருவர் இவ்வாறு கூறுகின்றார்:

“இமாம் ரிழா நைஷாபூருக்கு வந்த போது, அதன் மேற்குப் பகுதியில் லாஷாபாத் என பிரபல்யம் பெற்றிருக்கும் இடத்திற்கு வந்து, பஸந்தே என அழைக்கப்படும் எனது பெரிய தந்தையின் வீட்டுக்கு வந்தார்கள்.

இமாம் என் பெரிய தந்தையைத் தேர்ந்தெடுத்து அவரின் வீட்டுக்கு வந்ததன் காரணத்தால் எனது பெரிய தந்தை பஸந்தே ( தேர்ந்தெடுக்கப்பட்டவர்) என பெயர் சூட்டப்பட்டார்.

இமாம் எமது வீட்டின் ஒரு மூலையில் விதையொன்றை நாட்டினார்கள். அது ஒரு வருடத்தின் பின் மரமாகி கனியும் கொடுக்கத் தொடங்கியது. எத்தகைய நோயாளியும்; சுகம் தரும் எனும் நினைப்புடன் அக்கனியை சாப்பிட்டால் அவர் முற்றாகக் குணமடைவார். இவ்வாறு பலர்; சாப்பிட்டு தம் நோய்களிலிருந்து குணமடைந்தனர். (31)

இமாமுடைய தோழர்களில் ஒருவரான அபூ ஸிலத் ஹரவீ கூறுகின்றார்:
“நான் இமாம் ரிழாவுடன் இருந்தேன். இமாம் நைஷாபூரிலிருந்து வெளியாவதற்காக சாம்பல் நிறமுடைய குதிரையில் ஏறி அமர்ந்த போது முஹம்மத் இப்னு ராபிஉ, அஹ்மத் இப்னு அர்ஹத், யஹ்யா இப்னு யஹ்யா, இஸ்ஹாக் இப்னு றாஹவைஹி போன்றோரும் உலமாக்களில் ஒரு கூட்டத்தினரும் இமாமைச் சூழ்ந்து கொண்டனர்.

இமாமின் குதிரையின் கடிவாளத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு “தாங்களும் தாங்களது தந்தையர்கள் போன்று பாவங்களில் இருந்து பரிசுத்தமானவர் என நாம் சாட்சி கூறுகின்றோம். உங்கள் தந்தையாரிடமிருந்து கேட்ட ஒரு ஹதீஸை எமக்கு சொல்லுங்கள்” என கேட்டுக் கொண்டனர்.

இமாம் சொன்னார்கள்:

“ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் சொன்னதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் கூறியுள்ளார்கள்: “அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக நானே இறைவன், என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஆகவே நீங்கள் என்னையே வணங்குங்கள். உங்களில் எவர்

உளத்தூய்மையுடன் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற பிரமாணத்தைக் கூறுகின்றாரோ, அவர் எனது பாதுகாப்பில் நுழைந்து விடுவார். எவர் எனது பாதுகாப்பிலே நுழைந்து விடுகின்றாரோ, அவர் எனது வேதனையிலிருந்து அச்சம் தீர்ந்து விடுவார்" (32)

.

இந்த ஹதீஸை நபிகளாரிடம் இருந்து செவிமடுத்த இமாம் அலியிடம் இருந்து பின்னர் வந்த ஒவ்வொரு இமாமும் அடுத்து வருபவருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மற்றொரு அறிவிப்பில், அந்த கூட்டத்திலிருந்தவர்களில் ஒருவரான இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி என்பவர் கூறுகின்றார்: இமாம் ரிழா மேற்படி ஹதீஸைக் கூறியபின்னர் சிறிது தூரம் சென்று விட்டு பின் எம்மை நோக்கிச் சொன்னார்கள்:

"அல்லாஹ் ஒருவன் என்று நம்பிக்கை கொண்டால், அவனது தண்டனையிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும். ஆனால், அதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. அந்த நிபந்தனைகளில் நானும் ஒருவன்." (33)

அதாவது அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் பூரணமாக ஏற்பதில் நுபுவ்வத், மற்றும் அதனையடுத்து இமாமத் பற்றிய நம்பிக்கயும் அடங்கும்.

வேறு சில வரலாற்று ஏடுகளில் அறிவிக்கப்பட்டிருப்பதாவது: இமாம் இந்த ஹதீஸை சொன்ன போது நைஷாபூர் மக்கள் ( அக்காலத்தில் நைஷாபூர் குராசானின் மிகப் பெரிய மாவட்டங்களில் ஒன்றாக இருந்தது. அதில் அதிக சனம் வசித்துக் கொண்டிருந்தனர். அது வசிப்பதற்கு ஏற்ற இடமாகவும் காணப்பட்டது. பின் மங்கோலியரின் படையெடுப்பில் அவை அழிந்து விட்டன) இமாமைக் காணும் ஆசையோடு அங்கு ஒன்று சேர்ந்திருந்ததால், மக்களின் தொகை அதிகரித்து அவர்களின் அழுகைக் குரல்களாலும் தக்பீர் முழக்கங்களாலும் பகல் நேரம் வரை ஹதீஸ் சொல்ல முடியாது போய் விட்டது. அதனால் தலைவர்களும் காவலாளாகளும்; மக்களை நோக்கி, "மக்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களை அவர்களது குடும்பத்தினர் விடயத்தில் கஷ்டப்படுத்தாதீர்கள். அமைதியாக இருங்கள்" என கூக்குரலிட்டார்கள். இமாம் அந்நெருக்கடிக்கு மத்தியில் மக்களது ஆவலை நிவர்த்தி செய்வதற்காக ஹதீஸைச் சொன்னார்கள். அப்போது சுமார் 24000 பேனைகள் இமாமுடைய வார்த்தையை எழுத ஆயத்தமாகின. (34)

ஹரவி மேலும் கூறுகின்றார்:

இமாம் நைஷாபூரிலிருந்து புறப்பட்டு ஹம்ஸா (35)எனும் இடத்தை அடைந்த போது இமாமை நோக்கி "ளுஹர் ஆகிவிட்டது, தொழுவோமா?" என்றார்கள். உடனே இமாம் குதிரையிலிருந்து கீழே இறங்கி தண்ணீர் கேட்டார்கள். எனினும் எம்மிடம் தண்ணீர் இல்லாததால், இமாம் தமது கைகளினால் மண்ணைத் தோண்ட அதிலிருந்து ஊற்றுக் கண்ணொன்று வெளியானது. அத்தண்ணீரிலிருந்து அனைவரும் வுழுச் செய்து தொழுதார்கள். அவ்வூற்றுக் கண் இப்போதும் காட்சி தருகின்றது. (36)

இமாம் சனாபாத் எனுமிடத்தை அடைந்த போது பாத்திரங்கள் செய்வதற்காக பயன்படுத்தப்படும் மலையடியில் நின்று, "இறைவா! இம்மலையின் மூலமாக மக்களுக்கு பிரயோசனத்தை வழங்குவாயாக. மேலும், அதிலிருந்து செய்யப்படுகின்ற பாத்திரங்களில் உனது அருளைப் பொழிவாயாக" என்று பிரார்த்தித்து விட்டு, அக்கல்லிலிருந்து தனக்கும் ஒரு பாத்திரம் செய்யுமாறும், தனக்குரிய உணவை அப்பாத்திரத்தில் மாத்திரம் சமைக்குமாறும் கட்டளையிட்டார்கள். இமாம் எப்போதும் சிறிதளவு உணவு உண்பவராகவே இருந்தார்கள். (37)

இமாம், தூஸ் எனும் கிராமத்தில் ஹமீத் இப்னு கஹ்தபா என்பவருடைய வீட்டுக்கு வந்து அதில் ஹாரூன் ரஷீத் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்தில்; நுழைந்தார்கள். ஹாரூன் ரஷீதுடைய கப்றுக்கு அருகில் தம் கையால் சிறு கோடு ஒன்றைக் கீறிவிட்டுச் சொன்னார்கள். "இது எனக்குரிய இடமாகும். இதிலே நான் அடக்கம் செய்யப்படுவேன். இறைவன் விரைவில் இந்த இடத்தை; என்னை நேசிப்பவர்கள் வந்து செல்லும் இடமாக ஆக்குவான்" என்று கூறினார்கள் (38)

இறுதியாக இமாம் மர்வை அடைந்தார்கள். மஃமூன், இமாமை மிகவும் மரியாதையுடன் வரவேற்று எவருமில்லாத தனிப்பட்டதோர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். (39)

மஃமூனின் யோசனை

இமாம் மர்வை அடைந்ததன் பிறகு, மஃமூன் இமாமுக்கு அனுப்பிய செய்தியில் "நான் ஆட்சியிலிருந்து ஒதுங்கி அதை தங்களுக்குத் தர விரும்புகின்றேன். தங்கள் கருத்து என்ன?" என்று கேட்டிருந்தார். இமாம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் மஃமூன் அனுப்பிய கடிதத்தில், "ஆரம்பத்தில் நான் விடுத்த வேண்டுகோளை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே,

கட்டாயமாக எனது முடிக்குரிய வாரிசாக இருக்க ஏற்றுக் கொள்ளுங்கள்" எனக் கேட்டிருந்தார்.

இமாம் இதனை ஏற்பதையும் கடுமையாக மறுத்தார்கள். இறுதியில் மஃமூன் இமாமை தனிமையில் அழைத்துப் பேச ஆரம்பித்தார். அப்போது பிரதான மந்திரி பழ்ல் இப்னு ஸஹ்லும் உடனிருந்தார்.

மஃமூன் தனது பேச்சின் ஆரம்பத்தில், "ஆட்சியையும் முஸ்லிம்களின் விடயத்தையும் தங்களிடம் ஒப்படைக்கின்றேன்" என்று கூறினார். இமாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் தனது வாரிசாக இருக்கச் சம்மதிக்குமாறு வேண்டினார். அதையும் இமாம் ஏற்க மறுத்துவிட்டார்கள்.

இறுதியில் மஃமூன், இமாமை நோக்கி, "உமர் இப்னு கத்தாப் தனக்குப் பிறகு ஆட்சிக்காக ஆறுபேர் கொண்ட குழுவொன்றை ஏற்படுத்தினார். அவர்களில் ஒருவர் உங்கள் பாட்டனார் அலீ இப்னு அபீதாலிப் ஆவார். பிறகு உமர், அவர்களில் ஒருவர் இதற்கு மாற்றம் செய்தால் அவரின் தலை துண்டாடப்படும் என்று கட்டளையிட்டார். இப்போது நான் கூறியிருப்பதை ஏற்றுக் கொள்வதைத் தவிர உங்களுக்கு வேறுவழியில்லை. ஏனெனில், நானும் அதைத் தவிர வேறு வழியைக் காணவில்லை" என்று கூறினார்.

இதன் மூலம் இமாமுக்கு மறைமுகமான மரண அச்சுறுத்தலை மஃமூன் விட்டார். இமாமும் பலாத்காரத்தினால் வேறு வழியின்றி வெறுப்புடனும் அதிருப்தியுடனும் முடிக்கு வாரிசு என்ற அந்தஸ்துக்கு நிபந்தனைகளோடு சம்மதம் தெரிவித்தார்கள்.

"சில நிபந்தனைகளை முன்வைத்து இதனை ஏற்றுக் கொள்கின்றேன். அதாவது பதவி வழியாக நான் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பவனாகவோ அல்லது நீதியரசனாகவோ காழியாகவோ அல்லது மார்க்கத் தீர்ப்பு வழங்குபவராகவோ இருக்கமாட்டேன். யாரையும் பதவி நீக்கம் செய்யவோ, பதவியில் அமர்த்தவோ மாட்டேன். அரசின் எந்தவொரு விடயத்தையும் மாற்றியமைக்கவும் மாட்டேன்" என்று கூறினார்கள். மஃமூன் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டார். (40)

இதன்மூலம் மஃமூன், இமாமைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து, அவர்கள் மக்களை தம் பக்கம் அழைக்காமல் இருப்பதற்கும், அலவீக்களை அமைதிப்படுத்தி தன் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் திட்டமிட்டார்.

முடிக்குரிய வாரிசாக

றய்யான் இப்னு ஸிலத் கூறுகின்றார்:

“நான் இமாம் ரிழா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் சென்று, ‘நபியின் புதல்வரே! தாங்கள் மஃமூனது பதவியை ஏற்றுக் கொண்டதால், சில மனிதர்கள், தாங்கள் உலக ஆசாபாசங்களுக்காக இதனை ஏற்றுக் கொண்டதாகக் கருதுகின்றார்கள்” என்று கூறினேன்.

இமாம் சொன்னார்கள்: “இறைவன் சாட்சியாளன். இது எனக்கு விருப்பமானதல்ல. ஆனால், நான் இதனை ஏற்பதற்கும் மரணத்திற்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டேன். இதனால் வேறு வழியின்றி ஏற்றேன். இறைத்தூதர் நபி யூசுப் அலைஹிஸ் ஸலாம்; எகிப்து அரசரின் களஞ்சியப் பொறுப்பாளராவதை அவசியமெனக் கண்டு அதை ஏற்றுக் கொண்டார்கள். அதே போலவே இதுவும் வற்புறுத்தப் பட்டது. மேலும், நான் இந்தப் பதவிக்குள் என்னை முழுமையாக அமர்த்தவில்லை. நான் இறைவனிடம் இது பற்றி முறையிட்டு அவனிடம் உதவியும் தேடுகின்றேன்.”(41)

முஹம்மத் இப்னு அரபா கூறுகின்றார்:
நான் இமாம் ரிழாவிடம் சென்று, “நபியின் புதல்வரே! ஏன் அரச வாரிசாக இருக்க ஏற்றுக் கொண்டீர்கள்?” எனக் கேட்ட போது, “எதைக் கொண்டு என் பாட்டனார், அலீ அலைஹிஸ் ஸலாம், அந்தக் குழுவில் இருக்க வேண்டுமென அச்சுறுத்தப்பட்டார்களோ அதற்காகத் தான்” என்று கூறினார்கள். (42)

இமாமின் பணியாளர் யாசிர் கூறுகின்றார்:
இமாம் இப் பதவியை ஏற்றுக் கொண்டதன் பின்னர் அவர்களைக் கண்டேன். தம் கைகளை வானத்தின் பக்கம் உயர்த்திப் பிரார்த்தித்தார்கள். “இறைவா! நான் இதனை வேறு வழியின்றி வெறுப்புடன் தான் ஏற்றேன் என்பதை நீயறிவாய். எனவே, நீ என்னை உனது தூதர் யூசுபை அவர் எகிப்தின் பொறுப்பை ஏற்ற போது எவ்வாறு அவரை தண்டிக்கவில்லையோ அவ்வாறு என்னையும் உன் தண்டனைக்குள்ளாக்கி விடாதே!” என்று பிரார்த்தித்தார்கள். (43)

இமாம் அடுத்த ஆட்சியாளராக அமையப் போவதைக் கண்டு சந்தோஷப்பட்ட ஒரு தோழரைப் பார்த்துச் சொன்னார்கள்: “சந்தோஷப்படாதே! அது ஒருபோதும் நடக்காது. நிலைமைகள் இதே போன்று ஒருபோதும் இருக்காது” (44)

இமாமின் நிலைப்பாடு

இமாம் பெயரளவில் மாத்திரம் வாரிசுப் பதவியை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், செயலால் அதை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், அவர்கள் எந்தவொரு செயலுக்கும் பொறுப்பாகவோ அதிகாரியாகவோ இருந்து அரசியல் பணிகளில் பங்கெடுக்க மாட்டேன் என நிபந்தனை விதித்திருந்தார்கள். மஃமூனும் அதை ஏற்றுக் கொண்டிருந்தார்.

சில சமயங்களில் இமாமைப் பணிய வைத்து தனது எண்ணத்தை நடைமுறைப்படுத்த முயற்சிகள் செய்தார். ஆனால், இமாம் அதை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். ஒருபோதும் மஃமூனுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

முஅம்மர் இப்னு ஹல்லாத் அறிவிக்கின்றார்:
இமாம் ரிழா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் என்னிடம் சொன்னார்கள்: மஃமூன் என்னிடம், 'எனக்கெதிராகக் கிளர்ச்சி செய்யும் கிராமங்களின் ஆட்சிப் பொறுப்பை சிலரிடம் ஒப்டைக்கப் போகிறேன். இதனால், உங்களுக்குப் பிடித்த உறுதியான சிலரைக் கூறுங்கள்' என்று கேட்டார்.

அதற்கு நான் சொன்னேன்: 'நீர் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றினால் நானும் எனது உடன்படிக்கையை நிறைவேற்றுவேன். நான் இதில் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பவராகவோ, ஆலோசகராகவோ, பதவி நீக்கம் செய்பவராகவோ, அல்லது பதவியில் அமர்த்துபவராகவோ இருக்கமாட்டேன் எனும் நிபந்தனையுடன் தான் இதில் நுழைந்தேன்.'

'இறைவன் மீது ஆணையாக கிலாபத் பற்றிய எண்ணம் கிஞ்சித்தும் என்னிடம் இல்லை. நான் மதீனாவில் இருந்த போது எனது வாகனத்தில் ஏறி பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். நகரவாசிகளும் மற்றவர்களும் தமது தேவைகளை என்னிடம் கூறினர். நானும் அதை நிறைவேற்றினேன். அங்கு நானும் அவர்களும் ஒரு குடும்பத்தினர் போன்று இருந்தோம்.

'அந்நகரங்களில் எனது செய்திகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் கண்ணியமாகவும் காணப்பட்டது. நீ இறைவனால் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அருட்கொடைகளை விட அதிகமாக ஏதும் தந்துவிடவில்லை. எவற்றையெல்லாம் தரவிரும்புகின்றாயோ அதுவும் எனக்கு இறைவனால் தரப்படுவது தான்.'

இதன் பின் மஃமூன், 'நான் எனது உடன்படிக்கையின் பிரகாரம் நடந்து கொள்கிறேன்' என்று கூறினார்" (45)

முடிக்குரிய வாரிசாகப் பிரகடனம்

இமாம் மேற்குறிப்பிட்டது போன்று வாரிசுப் பதவியை நிபந்தனைகளோடு ஏற்றுக் கொண்டதன் பிறகு இது பற்றி; மக்களுக்கு அறிவித்து அரசியல் இலாபம் பெறுவதற்காக மஃமூன விழா ஒன்றை ஏற்பாடு செய்தார்.

வியாழக்கிழமை தன் அவையோர் பரிவாரங்களுடன் கூட்டம் நடாத்தினார். பழ்ல் இப்னு ஸஹ்ல் எழுந்து நின்று இமாம் ரிழா, மஃமூனது முடிக்குரிய வாரிசாக நியமித்ததை மக்களுக்கு தெரியப்படுத்தி விட்டு அமைச்சர்களை அடுத்தவாரம் வியாழக்கிழமை அலவீக்களின் ஆடையாக இருந்த பச்சை ஆடையை அணிந்து இமாமுக்கு பைஅத் செய்ய சமுகம் தருமாறு வேண்டினார்.

குறிப்பிட்ட நாளில் அனைத்து அமைச்சர்களும் ஆளுனர்களும் படைத்தளபதிகளும் நீதியரசர்களும் ஏனையோரும் பச்சைநிற ஆடை அணிந்தவர்களாக வருகை தந்தனர். மஃமூனும் வந்தமர்ந்தார்.

இமாமுக்கு தனியான இருக்கை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இமாமும் பச்சை நிற ஆடை அணிந்து தலைப்பாகையும் அணிந்தவர்களாக வாளுடன் வந்தமர்ந்தார்கள்.

இமாமிடம் தனது மகன் அப்பாஸ் முதலில் பைஅத் செய்ய வேண்டுமென மஃமூன் கட்டளையிட்டார். இமாம், புறங்கை தம் பக்கமும், உள்ளங்கை பைஅத் செய்பவரின் பக்கமும் இருக்குமாறு தமது கையை உயர்த்தினார்கள்.

இதைக் கண்ட மஃமூன் இமாமை நோக்கி, "உங்களது கையை பைஅத் செய்வதற்கு நீட்டுங்கள்" என்றார்.

நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் இதேபோன்று தான் பைஅத் செய்ததாக இமாம் எடுத்துக் கூறினார்கள்.

அப்போது மக்கள் இமாமிடம் பைஅத் செய்தார்கள். அச்சபையில் அன்பளிப்புகளும் பணப்பொதிகளும் வழங்கப்பட்டன. பேச்சாளர்களும் கவிஞர்களும் இமாமின் சிறப்புகளையும் மஃமூன் இமாமுக்குச் செய்த கௌரவத்தையும் புகழ்ந்துரைத்தனர்.

பின் மஃமூன் இமாமை நோக்கி, “நீங்களும் உரையாற்றுங்கள்” என்றார். இமாம் அல்லாஹ்வைப் புகழ்ந்ததன் பின் சமுகமளித்திருந்த அனைவரையும் விளித்துச் சொன்னார்கள்:

“நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி தரப்பிலிருந்து எங்களுக்கு உங்கள் மீது சில பொறுப்புகள், கடமைகள் இருக்கின்றன. அதேபோன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களுக்கும் எங்களுக்கும் உங்கள் மீதும் சில கடமைகள், பொறுப்புகள் உள்ளன. நீங்கள் உங்கள் மீதுள்ள கடமையை சரிவர நிறைவேற்றுகின்ற போது எங்கள் மீதும் உங்களது பொறுப்புகளை கண்ணியப்படுத்துவது கடமையாகும்” என்று கூறி வேறெதுவும் கூறாது தமது உரையை முடித்துக் கொண்டார்கள்.

பின்னர்; ரிழா என்ற பெயரில் திர்ஹம் நாணயம் ஒன்றை வெளியிடுமாறு மஃமூன் பணிப்பு விடுத்தார். (46)

பெருநாள் தொழுகை

அடுத்த நாள் விடிந்தால் பெருநாள். பெருநாள் தினத்தன்று, பெருநாள் தொழுகையை நடாத்தி வைக்குமாறு இமாம் ரிழாவுக்கு மஃமூன் செய்தி அறிவித்தார்.

ஆனால் இமாமோ, “நீர் உமக்கும் எனக்கும் இடையிலுள்ள நிபந்தனையை நன்கறிவீர். இதனால் அவற்றிலிருந்து நான் விலகிக் கொள்கின்றேன்” என பதில் அனுப்பினார்கள்.

மஃமூன் மீண்டும் அனுப்பிய செய்தியில், “நீங்கள் இதை நிறைவேற்றுவீர்களாயின், மக்கள் எனது பணியை உறுதியாக நம்புவதோடு உங்களது சிறப்புகளையும் அறிந்து கொள்வார்கள்” எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு இமாமுக்கும் மஃமூனுக்கும் இடையில் தூதுவர் சென்று வந்ததால், மஃமூன் இமாமை மிகவும் வற்புறுத்தினார். இறுதியாக இமாம் சொன்னார்கள்: “என்னை இழிவிலிருந்து விலக்கிக் கொள்ளவே நான் விரும்புகின்றேன். ஆனால் நீயோ விடுவதாகயில்லை. கட்டாயமாக இதை நான் நிறைவேற்ற வேண்டுமாயின் தொழுகையை நிறைவேற்றுவதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களைப் போன்றும், இமாம் அலீ அலைஹிஸ் ஸலாம்; போன்றும் தான் நான் வெளியில் வருவேன்”.

மஃமூன் அதனை ஏற்றுக் கொண்டு 'நீர் விரும்பியவாறு வெளியில் வரலாம்' என்று கூறிவிட்டு படைகளுக்கும் சபையோருக்கும் பொதுமக்களுக்கும் பெருநாள் அதிகாலையில் இமாமுடைய வீட்டுக்கு முன் சமுகம் தருமாறு கட்டளை பிறப்பித்தார்.

பெருநாள் அதிகாலை சூரியன் உதிப்பதற்கு முன் வீதிகளிலும், சந்துகளிலும் மக்கள் நிரம்பி விட்டார்கள். பெண்களும் குழந்தைகளும் கூட இமாமுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். படைத்தளபதிகள் தத்தமது படைகளுடன் குதிரைகளில் ஏறியவர்களாக இமாமுடைய வீட்டுக்கு முன் நின்று கொண்டிருந்தார்கள்.

சூரியன் உதயமானது. இமாம் குளித்து ஆடையணிந்து பருத்தித் தலைப்பாகையை தலையில் வைத்து அதன் ஒரு நுனியை மார்பின் மீதும் மறு நுனியை தோளின் மீதும் தொங்கவிட்டு கைத் தடியை கையில் எடுத்தவர்களாக வெளியயேறினார்கள்.

தம்முடன் இருந்தவர்களை நோக்கி, 'நான் செய்வது போன்று செய்யுங்கள்' என பணித்தார்கள்;. இமாம் வெறுங்காலோடு நடப்பதைக் கண்ட படையணிகள் கூட வாகனத்தில் இருந்து கீழே இறங்கினர். தம் பாதணிகளை அகற்றிக் கொண்டனர்.

இமாம் வெறுங்காலுடன் ஆடை கரண்டைக் காலை விட்டு; உயர்த்திப் பிடித்து இருக்கும் நிலையில் நடப்பதற்கு ஆரம்பித்தார்கள். சிறுதூரம் கடந்ததும் தலையை வானத்தின் பக்கம் திருப்பி தக்பீர் சொன்னார்கள்;. இக்காட்சி பார்ப்பதற்கு வியக்கத்தக்கதாகக் காணப்பட்டது. சில சமயங்களில் வானமும் பூமியும் சேர்ந்து தக்பீர் சொல்வது போன்று தென்பட்டது. அன்று மர்வ் நகரம் அனைத்தையும் அழுகையும் மகிழ்ச்சியும் ஆக்கிரமித்துக் கொண்டது.

பழ்ல் இப்னு ஸஹ்ல் இந்நிலையைக் கண்டு உடனே மஃமூனுக்கு தகவலறிவித்தார். 'அமீரே! இதே போன்று ரிழா முஸல்லாவிற்குச் சென்றால் குழப்பங்களும் கிளர்ச்சிகளும் ஏற்பட்டு அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும். எனவே, அவரை மீளுமாறு அறிவியுங்கள்' என்று வேண்டினார்.

மஃமூன், இமாமிற்கு 'நாம் உங்களுக்கு கடும் சிரமத்தைக் கொடுத்து விட்டோம். உங்களுக்கு ஏதும் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. எனவே, நீங்கள் மீண்டு வாருங்கள். வழமையாக தொழுகை நடாத்துபவர்கள் இம்முறையும் அதை நடாத்துவார்கள்' என செய்தியறிவித்தார்.

செய்தி கிடைத்ததும் இமாம் தமது பாதணிகளைத் தருவித்து அவற்றை அணிந்து கொண்டு குதிரையில் ஏறி தம் வீட்டை வந்தடைந்தார்கள். (47)

மக்கள், இதன் பின்னர், மஃமூனின் நயவஞ்சகத்தனத்தையும் பொதுமக்களை ஏமாற்றுவதையும் இமாமுக்கு செய்திருக்கும் அனைத்தும் தனது அரசியல் இலாபத்திற்காகவே என்ற உண்மையையும் உணர்ந்து அதுபற்றி ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளலாயினர்.

ஆய்வு மன்றங்கள்

மஃமூன் தனது ஆட்சியிலே இமாமுக்கு எதிராக வேறு பல சதித்திட்டங்களையும் தீட்டினார். இமாமுக்கு மக்களிடத்தில் இருக்கும் சிறப்பையும் கௌரவத்தையும் குறைத்து விடும் எண்ணத்தில் பல துறைகளில் பாண்டித்தியம் பெற்ற பல அறிஞர்களை இமாமுடன் தர்க்கத்திற்கு அமர்த்தி இமாமைத் தோல்வியடையச் செய்ய முயன்றார், சமூகத்தில் இமாமுக்கிருக்கும் அந்தஸ்தும் கண்ணியமும் இத்தோல்வியால் குறையுமென்றும் அவர் நினைத்தார்.

ஆனால், இச்சதித்திட்டத்தின் மூலமாக மக்கள் மத்தியில் இமாமுக்கிருந்த கண்ணியம், அந்தஸ்து மேலும் அதிகரித்தது, மஃமூன் வெட்கமும் கைசேதமும் அடைந்ததைத் தவிர வேறெதுவும் நடக்கவில்லை. இமாமிடமிருந்த தெய்வீக ஞானம் மஃமூன் போன்ற ஒரு வௌவாலை பொறாமையெனும் நெருப்பில் பலதடவைகள் குருடாக்கியது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அஹ்லுல் பைத் சார்பு ஹதீஸ் அறிவிப்பாளரும் மார்க்க மேதையுமான ஷெய்க் சதூக் குறிப்பிடுகின்றார்:

‘மஃமூன், இமாமுடன் தர்க்கம் புரிவதற்காக வழிகெட்ட கூட்டங்களைச் சேர்ந்த பல அறிஞர்களை அழைத்து அவர்கள் இமாமை தோற்கடிப்பார்கள் என நப்பாசை கொண்டிருந்தார். ஆனால், இமாமுடன் தர்க்கம் புரிய வந்த அனைவரும் இறுதியில் இமாமுடைய ஆதாரங்களுக்கு முன் சரணடைந்து அவர்களின் சிறப்பையும் அந்தஸ்தையும் ஏற்றுக் கொண்டார்கள்’. (48)

நௌபலீ கூறுகின்றார்: கலீபா மஃமூன், பழ்ல் இப்னு ஸஹ்லை நோக்கி, நாட்டிலுள்ள யூத, கிறிஸ்தவ, கத்தோலிக்க, சொராஸ்திரிய, சாயிபீன்;

தலைவர்கள், அறிஞர்கள், போன்றோரின் தலைசிறந்த அறிஞர்களை ஒன்று திரட்டுமாறு பணித்தார்.

இமாம் ரிழா அலைஹிஸ் ஸலாம் பல கொள்கைவாதிகளுடன். பேச விரும்புகின்றாரா என்பதை கேட்டு வருமாறு இமாமின் பணியாள் யாசிர் மூலமாக மஃமூன் செய்தி அனுப்பினார்.

இமாமும் அதை ஏற்றுக் கொண்டு நாளை வருகின்றேன் என்று சொல்லியனுப்பினார்கள்.

யாசீர் சென்றவுடன் இமாம் என்னை நோக்கி, 'நௌபலீ! நீர் இராக்கைச் சேர்ந்தவர். அவர்களை விட கூரிய புத்தியும் சிந்தனையும் கொண்டவராக இருக்கின்றீர். மஃமூன் இந்த இறை நிராகரிப்பாளர்களையும் கொள்கைவாதிகளையும் ஒன்று சேர்த்திருப்பதில் இருந்து எதைப் புரிந்து கொள்கிறீர்?' எனக் கேட்டார்கள்.

"உங்களைப் பரீட்சித்து உங்களது அறிவினது தரத்தை அறிய விரும்புகின்றார்கள் போலும்" என்று நான் கூறினேன்.

இமாம்: அவர்கள் எனது கருத்தையும் ஆதாரங்களையும் பொய்பிப்பார்கள் என நீர் அஞ்சுகின்றீரா?
நௌபலி: இறைவன் மீது ஆணையாக ஒருபோதும் இவ்வாறொரு அச்சம் எனக்கு ஏற்பட்டதில்லை. இறைவன் அவர்களை தோற்கடிக்கச் செய்து உங்களை வெற்றியடையச் செய்வான் என்றே நம்புகின்றேன்.

இமாம் : நௌபலீ! மஃமூன் எப்போது கைசேதப்படுவான் என அறிய விரும்புகின்றீரா?
நௌபலீ : எப்போது இமாமே?.

இமாம் : நான் யூதர்களுக்கு அவர்களது தௌராத் மூலமாகவும் இன்ஜீல் உடையோர்களுடன் இன்ஜீல் மூலமாகவும், ஸபூர் உடையோருடன் ஸபூர் மூலமாகவும் சாயிபீன்களுடன் அவர்களது ஹிப்று மொழி மூலமாகவும் சொராஸ்தியருக்கு பாரசீக மூலமாகவும் அவர்கள் ஒவ்வொருவருடனும் அவரவர் மொழிகளில் பேசும் போதும், அவர்களது ஆதாரங்களைத் தகர்த்து அவர்கள் தங்களது கொள்கையிலிருந்து ஒதுங்கி எனது ஆதாரங்களின் பால் தலைசாய்க்கும் போதும் மஃமூன் தான் அமர்ந்திருக்கும் ஆசனம் தனக்குரியதல்ல என்று அறிந்து கைசேதமடைவான். மகத்துவமும் உயர்வும்

கொண்ட அல்லாஹ்வின் மூலமாகவேயன்றி எவ்வித திருப்பமும் சக்தியும் இல்லை.

மறுநாள் காலையில் இமாம் அவைக்கு வந்தார்கள். அப்போது யூதப் பெரியார் இமாமை நோக்கி "நாம் உம்மிடமிருந்து தௌராத்தையும் இன்ஜீலையும் ஸபூரையும் இப்ராஹீம், மூஸா ஆகியோரின் சுஹுபுகளையும் தவிர வேறெதையும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்றார்.

இன்ஜீல், ஸபூர் போன்றவைகளிலிருந்து விரிவான ஆதாரங்களை இமாம் கொடுத்த போது அவர்கள் இமாமை உண்மைப்படுத்தினர். அதேபோன்று இமாம் மற்றவர்களுடன் கேள்விகள் தொடுகக அனைவரும் விடையளிக்க முடியாமல் மௌனம் சாதித்தனர். பின் இமாமவர்கள், தர்க்கம் புரிய வந்தோரை நோக்கி, "அறிஞர்களே, உங்களில் யாரும் முரண்படுவதாக இருந்தால் அல்லது உங்களிடம் கேள்விகள் இருப்பின் வெட்கம் தயக்கமின்றி கேளுங்கள்' என்றார்கள்.

அப்போது தர்க்கத்தில் பாண்டித்தியம் பெற்றிருந்த சாபியீன்களின் அறிஞர் எழுந்து, "அறிஞரே! நீங்கள் கேள்விகள் இருப்பின் கேளுங்கள் என்று சொல்லாதிருந்திருப்பின் நான் இதை கேட்டிருக்கமாட்டேன். ஏனெனில், நான் கூபா, பஸரா, ஷாம் போன்ற பிரதேசங்கள் உட்பட பல இடங்களுக்கு சென்று, அங்கிருந்த பல அறிஞர்களுடன் உரையாடியுள்ளேன். ஆனால், அவர்களில் ஒருவரும் இறைவன் ஒருவன் என்பதை எனக்கு நிரூபிக்கவில்லை" என்று கூறினார்.

இமாம், இறைவன் ஒருவன் தான் என்பதை தெளிவான விரிவான பல ஆதாரங்கள் மூலம் நிரூபித்துக் காட்டினார். ( 49) இதனைக் கேட்டு சந்தோஷமடைந்த அவர் "என் தலைவரே! அறிந்து கொண்டேன். நீங்கள் கூறியது போன்று இறைவன் ஒருவன் தான் என்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அல்லாஹ்வின் அடியார்களை நேர்வழிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட அவனது தூதர் என்றும் சாட்சியம் கூறுகின்றேன்' எனக் கூறி கிப்லாவை நோக்கி சுஜூதில் விழுந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

அறிஞர்கள் சாபியீன் அறிஞரின் வார்த்தைகளைக் கேட்டதும் இமாமிடம் வேறெதுவும் கேட்கவில்லை. மாலையானதும் மஃமூன் எழுந்து சென்றார். மற்றவர்களும் இமாமுடன் வீட்டிற்குச் சென்றனர். கூடியிருந்த மக்களும் கலைந்து சென்றனர். (50)

ஷஹாதத்

இறுதியாக மஃமூன் இமாமைக் கொலை செய்வதற்கு முடிவு செய்தார். ஏனெனில், அவரால் எவ்விதத்திலும் இமாமை தனது கைப்பொம்மை யாக்க முடியவில்லை. இமாமுக்கு சமூகத்திலிருக்கும் அந்தஸ்தையும் மதிப்பையும் குறைத்து அவர்கள் மீது ஓர் இழிவை ஏற்படுத்துவதற்காக தன்னாலான சக்திகளைக் கொண்டு முயற்சி செய்தும் அவை பயனளிக்கவில்லை. அதனால் நாள்தோறும் சமூகத்தின் மத்தியில் இமாமினது அந்தஸ்தும் கௌரவமும் அதிகரித்துச் சென்றதே தவிர குறையவில்லை.

ஒருபுறம் காலமும் நேரமும் செல்லச் செல்ல இமாமுடைய யதார்த்தமும், தனது பொய்மையும் வெளியாகுமென மஃமூன் அறிந்திருந்தார். மறுபுறம் தனது வாரிசாக இமாமை நியமித்ததற்காக அப்பாசியர்களும் அவர்களது தரப்பினரும் மஃமூனை பலமாக எதிர்த்தனர்.

இவர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காக பக்தாதில் இப்ராஹீம் இப்னு மஹ்தியுடன் பைஅத் செய்தனர். இதனடிப்படையில் மஃமூனுடைய அரசு பலவகையிலும் ஆபத்தில் மாட்டிக் கொண்டிருந்தது.

இமாமைக் கொல்வதன் மூலமாக தான் நிம்மதியடைவதுடன், அப்பாசியரையும் அவர்களது ஆதரவாளர்களையும் தன் பால் ஈர்த்துக் கொள்ள முடியுமெனத் திட்டமிட்ட மஃமூன், இறுதியில் தனது சதிமுயற்சியினூடாக இமாமுக்கு நஞ்சூட்டி அதன் மூலம் அவர்களைக் கொலை செய்தான்.

இமாமுடைய ஷஹாதத்திற்குப் பிறகு அப்பாசியருக்கு மஃமூன் எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது: “எனது முடிக்குரிய வாரிசாக அலீ இப்னு மூஸா அர்ரிழாவை நியமித்தமைக்காக என்னை விமர்சித்துக் கொண்டிருந்தீர்கள். அவர் மரணித்து விட்டார் என்பதை இப்போது அறிந்து கொண்டு எனக்கு ஆதரவு தாருங்கள்.” (51)

இமாம் ஷஹீதாகியுள்ளார்கள் என்பதை அவர்களது ஆதரவாளர்களுக்குத் தெரியப்படுத்தாமல் இமாம் இயற்கையாகவே உயிரிழந்தார்கள் என்று கூறி, தனது குற்றச் செயலை மறைப்பதற்காக மஃமூன் பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் உண்மை ஒருபோதும் மறைந்து விடுவதில்லை.

நடந்த விசயங்கள் அனைத்தையும் இமாமுக்கு மிக நெருங்கிய நண்பர்கள் அனைவரும் அறிந்து கொண்டார்கள்.

இமாமுடைய மிக நெருங்கிய நண்பரான அபூ ஸல்த் ஹரவி என்பவர் மஃமூன் இமாமை கொல்வதற்குத் துணிந்த காரணத்தை எமக்கு இவ்வாறு சொல்கின்றார்:

“அஹ்மத் இப்னு அலீ அன்சாரி அறிவிக்கிறார்: ‘இமாமுக்கு மிக கண்ணியம் கொடுத்து அவர்களை தனது வாரிசாக நியமித்த மாமூன், எவ்வாறு அவர்களை கொலை செய்வதற்கு முன்வந்திருப்பார்? எனக் அபூ ஸலத்திடம் கேட்டதற்கு இவ்வாறு கூறினார்:

‘மஃமூன், இமாமுடைய சிறப்பையும் கண்ணியத்தையும் மக்கள் மத்தியிலிருக்கும் அந்தஸ்தையும் பார்த்து அவர்களை தானும் கண்ணியப்படுத்துவதாக நடித்து மக்கள் மத்தியில் இமாம் உலகப் பற்றுடையவர் என்பதை சொல்ல இமாமை தனது வாரிசாக நியமித்தார்.

ஆனால், இதன் விளைவாக இமாமுடைய நற்செயலுக்கும் நற்குண நன்னடத்தைக்கும் எவ்வித பங்கமும் ஏற்படாது, நாள்தோறும் அவர்களது கண்ணியம் மக்கள் மத்தியில் மேலும் வளர்ந்தது.

மேலும், மஃமூன், பல பகுதிகளிலிருந்து பலதுறைகளில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களை அழைத்து அவர்கள் மூலமாக இமாமைத் தோற்கடித்து இமாம் முழுமையான அறிஞர் அல்ல என மக்கள் மத்தியிலே பரப்புவதற்கு எத்தனித்தார். ஆனால், எந்தவொரு யூதனோ, கிறிஸ்தவனோ, நெருப்பு வணங்கியோ, அல்லது முஸ்லிம்களின் தர்க்கவாதிகளோ இமாமுடைய அறிவுபூர்வமான ஆதாரத்திற்கும் ஆக்கபூர்வமான விளக்கத்திற்கும் தலையசைத்தார்களே தவிர, இமாமைத் தோற்கடிக்க முடியவில்லை.

இதனால், மக்கள் இறைவன் மீது சத்தியம் செய்து, ஆட்சி புரிவதற்கு மஃமூனை விட இமாம் ரிழாவே மிகப் பொருத்தமானவர் என்று கூறினர். இதனை மஃமூனுடைய ஒற்றர்கள் அவரிடம் சொல்ல, கடுமையாக கோபமடைந்த மஃமூனில் பொறாமையெனும் நெருப்புக் கிடங்கு கோரமாக எரிந்தது.

அத்தோடு மஃமூனுக்கு முன் உண்மையைச் சொல்வதில் இமாம் ஒருபோதும் தயங்கியது கிடையாது. பல சந்தர்ப்பங்களில் மஃமூன் விரும்பாத விடயங்களை இமாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். மஃமூன், இமாம் மீது கடுங்கோபம்

கொள்வதற்கு இவை காரணமாகின. அவர் இமாமுக்கு எதிராக செய்த சதித்திட்டங்களில் ஒரு முடிவைக் காணாததால், இறுதியில் மறைமுகமாக அவர்களுக்கு நஞ்சூட்டிக் கொலை செய்தார். (52)

இமாமுடன் இறுதிவரை இருந்து கடைசியில் நல்லடக்கத்திலும் கலந்து கொண்ட அபூ ஸிலத் கூறினார்: "மர்விலிருந்து பக்தாதுக்குச் சென்று கொண்டிருக்கையில் வழியில், மஃமூன் தூஸில் வைத்து திராட்சைச் சாற்றில் நஞ்சூற்றி இமாமைக் கொலை செய்தார்". (53)

இமாமுடைய புனித உடல் ஹாரூன் அடக்கம் செய்யப்பட்டிருந்த கோட்டைக்குள் அவரது கப்றுக்கு அருகாமையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. உள்ளத்தை உருக்கும் இந்நிகழ்வு ஹிஜ்ரி 203, ஸபர் கடைசி நாளில் இடம்பெற்றது. அப்போது இமாமுக்கு வயது 55.

வரலாறு மௌனம் சாதித்ததால், மஃமூனைப் போன்ற அராஜகர்களின் அநீதிகளையும் அட்டகாசங்களையும் அட்டூழியங்களையும் வருங்கால சந்ததியினர் சரிவர அறிந்து கொள்ள முடியாது போய்விட்டது. மஃமூன் தனது குள்ளநரித் தனத்தால் இமாமை மாத்திரம் நஞ்சூட்டிக் கொல்லவில்லை. இமாமினது குடும்பத்தினரில் அநேகமானோரையும் இமாமுக்கு உதவி செய்தவர்களையும் சீடர்களையும் அழித்தொழித்தார்.

சிலர், ஆட்சியாளர்களின் கண்ணுக்குப் படாதவாறு மூலை முடுக்குகளெல்லாம் பரந்து பரதேசிகளாகச் சென்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலே தம் வாழ்வையும் பணியையும் தொடர்ந்தார்கள். இறுதியில் அவர்களில் பலர் ஷஹாதத்தென்னும் உயர் அந்தஸ்தைப் பெற்றனர். இன்னும் சிலர் மறைமுகமாக வாழ்ந்து உலகிற்கு பிரியாவிடை கூறினர்.

பொன்மொழிகள் சில

"ஒவ்வொரு மனிதனும் தனது நாவின் கீழ் மறைந்திருக்கின்றான்." (54)

"செயலுக்கு முன் சிந்திப்பது கைசேதப்படுவதிலிருந்து காப்பாற்றும்."

"தீயவர்களுடன் அமர்ந்திருப்பது, நல்லவர்களைப் பற்றிய தீய எண்ணத்துக்கு வழிவகுக்கும."

"அல்லாஹ்வின் அடியார்களை பகைமை பாராட்டுவது மறுமைக்கான ஆயத்தத்தில் மிகக் கெட்டதாகும்."

“தன் சக்தியை அறிந்து கொண்டவன் எப்போதும் அழிய மாட்டான்.”

“அன்பளிப்புகள், நெஞ்சங்களில் உள்ள வஞ்சங்களை நீக்கிவிடும்”
“உங்களில் மறுமை நாளில் எனக்கு மிக நெருக்கத்தில் அமர்ந்திருப்பவர் யாரெனில், உங்களில் நற்குணமுடையோரும் தனது குடும்பத்திற்கு நல்லது செய்பவருமாவார்.” (55)

“ஒரு முஸ்லிமுக்கு துரோகமிழைப்பவன் நம்மைச் சார்ந்தவனல்ல”

“முஃமின் யாரெனில், கோபமடையும் போது அவனது கோபம் அவனை உண்மையை விட்டும் வெளியாக்கி விடாது.”

“நிச்சயமாக அல்லாஹ், வதந்திகளைப் பரப்புவதையும் செல்வத்தை விரயம் செய்வதையும், குதர்க்கம் புரிவதையும் விரும்ப மாட்டான்.”

“மனிதர்களை நேசித்தல் புத்தியில் பாதி.”

“கடினமான செயல்கள் மூன்று: உரிமைகளைக் கொடுப்பது. சதா இறைவனைத் தியானிப்பது. செல்வத்தில் தன் சகோதரனுடன் சமத்துவம் பேணுவது.”

“வள்ளல் மக்களோடு அமர்ந்து உண்ணுவார் அவர்களோடு பகிந்து கொள்வதற்காக.”

“குர்ஆன் இறைவனது பேச்சாகும். அதனை மீற வேண்டாம் அதை வைத்து விட்டு வேறொன்றில் நேர்வழியைத் தேடாதீர்கள். வழிதவறிவிடுவீர்கள.” (56)

இமாமின் பதில்கள் சில

கேள்வி : அல்லாஹ் எத்தகையவன்? எங்கே இருக்கின்றான்?

பதில் : முதலில் இந்தக் கற்பனை அடிப்படையில் பிழையானதாகும். ஏனெனில் இறைவன் இடத்தைப் படைத்தான். அவன் இடத்துக்கு அப்பால் உள்ளவன். சிருஷ்டிகளின் தன்மைகளை அவனே சிருஷ்டித்தான். தன்மைகளுக்கு அப்பால் அவன் உள்ளான். எனவே, இறைவனை எத்தன்மையானவன் என்றும் அவனது இடம் பற்றியும் புலனறிவாலோ வேறொன்றோடு ஒப்பிட்டோ அறிய முடியாது.

கேள்வி : அல்லாஹ் எப்போது தோன்றினான்?

பதில்:; எப்போது இருக்கவில்லை எனக்கூறுங்கள். எப்போது தோன்றினான் எனக் கூறுகிறேன்.

கேள்வி: உலகம் புதுமையானது (பூர்வீகமானதல்ல) என்பதற்குரிய ஆதாரங்கள் என்ன?

பதில் : நீ முன்பு இருக்கவில்லை. பிறகு உருவாகினாய். உன்னை நீயே உருவாக்கவில்லை என்பதும்; அத்துடன் உன்னைப் போன்ற ஒருவரும் உன்னை உருவாக்கவில்லை என்பதும் உனக்குத் தெரியும்.

கேள்வி: உங்களால் இறைவனை வர்ணித்துக் கூற முடியுமா?

பதில்: இறைவனை வேறொன்றோடு ஒப்பிட்டு வர்ணிக்கும் ஒருவர் எப்போதும் தப்புச் செய்கிறார். அவர் கூறுவது அனைத்தும் நிராகரிக்க வேண்டியவையாகும். நான் இறைவனை அவன் தன்னை வர்ணித்திருப்பது போன்று எனது சிந்தனையில் அவனது உருவமோ, கற்பனையோ இல்லாமல் வர்ணிக்கின்றேன். இறைவனை மனிதனது ஐம்புலன்களால் அறிந்து கொள்ள முடியாது. படைப்புகளுடன் ஒப்புநோக்கவும் முடியாது. ஒப்பாகாது அறியப்படுவான். அவனுக்கு படைப்பினங்களை உதாரணம் கூற முடியாது. நீதி வழங்குவதில் எவருக்கும் அநீதியிழைக்கமாட்டான். அத்தோடு பல அத்தாட்சிகளைக் கொண்டு அறியப்படுவான். (57)

கேள்வி : பூமி ஓர் இமாமின்றி இருப்பது சாத்தியமா?

பதில் : கண்கொட்டும் நேரமாவது பூமி இமாம் - வழிகாட்டி இல்லாமல் இருந்தால், அது தன் மீது இருப்பவர்களை விழுங்கி விடும்.

கேள்வி: இமாம் மஹ்தி வெளியாகுவது பற்றி அறியத் தருவீர்களா?

பதில்: அவரை எதிர்பார்த்திருப்பதுவே அவர் வெளிப்படுவதைத் தானே காட்டுகிறது

கேள்வி : ஈமான், இஸ்லாம் என்றால் என்ன?

பதில் : இமாம் பாக்கிர் அலைஹிஸ் ஸலாம் சொன்னார்கள்: ஈமான், இஸ்லாத்தைவிட உயர்ந்த படித்தரமாகும். தக்வா, ஈமானைவிட உயர்ந்த படித்தரமாகும். யகீன், தக்வாவைவிட உயர்ந்த படித்தரமாகும். மக்களுக்கு மத்தியில் யகீனை விட குறைவாக எதுவும் பங்கிடப்படவில்லை.

கேள்வி : யகீன் என்றால் என்ன?

பதில் : அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்தல், அவனது கட்டளைக்கு முன் பணிதல், இறைவனது தீர்ப்புகளை மன நிறைவோடு ஏற்றல், எமது விவகாரங்களை அவனிடம் ஒப்படைத்தல். (58)

கேள்வி : தற்பெருமை நற்கருமங்களை அழித்துவிடுமென்றால் என்ன?

பதில் : தற்பெருமைக்கு பல படித்தரங்கள் உண்டு. அதில் ஒன்று ஒரு அடியானுக்கு தனது தீய செயல்கள் அழகாக, நற்காரியம் போல் தோன்றுவது. அதனை ரசித்து, மெச்சி, தான் நற்காரியம் புரிவதாக நம்புவான்.

கேள்வி : நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் ‘எனது உள்ளம் சாந்தம் பெறுவதற்காக’ என்று கூறினார்கள். அவர்களது உள்ளத்தில் சந்தேகம் இருந்ததா?

பதில்: இல்லை. நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது உள்ளத்தில் யகீன் இருந்தது. அவரது நோக்கம் இறைவன் மீதான யகீனை மென்மேலும் அதிகரிப்பதேயாகும்.

கேள்வி: அமீருல் முஃமினீன் அலீ அலைஹிஸ் ஸலாம் பற்றிய சிறப்புகளை மக்கள் நன்கு அறிந்திருந்தும் நபிகாளாருடனான அவரது அந்தஸ்தைப் புரிந்திருந்தும் அவரிடம் இருந்து ஒதுங்கி நிற்கக் காரணம் என்னவாயிருக்கும்?

பதில்: அவரது சிறப்பை அறிந்தது போன்றே, அல்லாஹ் றசூலுக்கு மாறு செய்த தத்தம் கூட்டத்தைச் சேர்ந்த உறவினர்கள் நண்பர்கள் பலரும் அன்னாரது வாளுக்கு இரையானதும் அவர்களுக்குத் தெரியும். அவர்களது உள்ளங்களில் ஏனைய எவரைப் பாற்றியும் அத்தகைய உணர்வு இருக்கவில்லை. ஜிஹாதில் நபிகளாரடம் இமாம் அலீக்கு இருந்த அந்தஸ்து தனித்துவமானது. எனவே அவரை ஆதரிக்க, பலர் விரும்பவில்லை.

**அடிக்குறிப்புகள்**

1. அல காபீ பா.1 பக். 286, அஃலாமுல் வரா, ப.302, இர்ஷாத், முபீத், ப. 285 , காமூசுர் றிஜால் பா.11, ப.31
2. தக்தும் என வேறு பெயர் உண்டு
3. அஃலாமுல் வரா 302

4. அ.ஃலாமுல் வரா ப.305 , அல் காபீ பா.1, ப.316
5. அ.ஃலாமுல் வரா ப.314
6. அ.ஃலாமுல் வரா ப.315
7. அல் காபி பா.6 ப.283
8. அல் மனாகிப் பா.4, ப. 362
9. உயூனு அக்பாரிர் ரிழா பா.2, ப.174
10. அல் காபி பா.8, ப. 230
11. அல் காபி பா.6, ப.298
12. அல் மனாகிப் பா.4, ப.360
13. அல் காபி பா.5, ப.288
14. முஃஜமு றிஜாலல் ஹதீஸ், பா. 2, ப.237, றிஜாலுல் கஷ்ஷீ 588
15. அல் காபி பா.1, ப.487
16. அல் காபி பா.8, ப.257
17. தாரீஹ் இப்னு அதீர் பா.6, ப.227
18. யஹ்யா இப்னு அக்ஸம் பற்றிய விளக்கத்துக்குப் பார்க்க: மஸ்ஊதியின் முரூஜ் அல் தஹப் மற்றும் இப்னு கல்லிகானின் வரலாற்று நூல்.
19. இமாம் றிழா, முஹம்மது ஜவாத் பழ்லுல்லாஹ் 91
20. விபரத்துக்குப் பார்க்க: மகாத்திலுத் தாலிபீன், அபுல் பரஜ் அல் இஸ்பஹானியுi;டயது.
21. அல் பிஹாh', பா. 49, ப.139
22. உயூனுல் அக்பார், பா.2, ப.239
23. கஸ்புல் கும்மா பா.3, ப.92
24. உயூனுல் அக்பார் பா.2, ப.212
25. முஸ்னது இமாம் றிழா பா.2, ப.96
26. அல் பிஹார் பா.49, ப.189
27. அல் காபி பா.1, ப.498
28. அல் பிஹார் பா.49,ப.91
29. உயூனுல் அக்பாருர் றிழா, பா.2, ப.181,182
30. பிஹாருல் அன்வார் பா.49, ப.118
31. உயூனுஅக்பாரிர் றிழா பா.2,ப.131
32. உயூனுஅக்பாரிர் றிழா 2ஃ132,133
33. உயூனுஅக்பாரிர் றிழா 2ஃ134
34. அல் பிஹார் பா.49, ப.127
35. ஹம்ரா எனும் கிராமம் பாரசீக மொழியல் தெஹ்ஸுர்க் - செங்கிராமம் எனப்படுகிறது

36. அல் பிஹார் பா.49,ப.125
37. அல் பிஹார் பா.49, ப.125
38. அல் பிஹார் பா.49, ப.125
39. அல் இர்ஷாத், முபீத், ப. 290
40. அல் இரஷாத், முபீத், ப. 290
41. இலலுஷ் ;ஷராயிஉ, ப. 227,228
42. உயூனுல்அக்பார் பா.2, ப.141
43. ஆமாலி, அஸ்ஸதூக், ப. 72
44. அல் இர்ஷாத், ப. 292
45. உயூனுல் அக்பார் பா.2, ப.164
46. அல் இர்ஷாத் ப.291
47. அல் இரஷாத் ப.213,214
48. அல் பிஹார் பா.49, ப.175,176
49. இமாம் இங்கு முன்வைத்த ஆழமான மற்றும் அசைக்க முடியாத தர்க்கங்கள் பற்றி ஷெய்க் ஸதூக் எழுதிய தவ்ஹீத் எனும் நூலில் வாசிக்கலாம்.
50. தவ்ஹீத், ஸதூக் ப.417 – 440
51. அத்தபரீ பா.11, ப.1030 , அல் பிதாயது வன்னிஹாயா பா.10, ப.249
52. உயூனுல் அக்பார் பா.2, ப.241
53. உயூனுல் அக்பார் 2.:.245
54. - 49.:.5 முஸ்னதுல் இமாமுர்ரிழா (அலை) 1.:.291 – 294
55. முஸ்னதுல் இமாமுர்ரிழா. புh.1, ப.294 – 305
56. முஸ்னதுல் இமாமுர்ரிழா பா.1, ப. 307
57. முஸ்னது இமாம் அல் ரிழா, பா.1, ப.227
58. முஸ்னது இமாம் அல் ரிழா. பா.1, ப.258